பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று

வருட சந்தா முன் பணம் ..	ரூ 3—0
6 மாத சந்தா ,, ...	ரூ 1–12
வெளி நாட்டிற்கு ,, ...	ரூ 4—0

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஹு வைகாசி-மீ 23உ (5—6—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 6

மின்சார ரசம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபால் சார்ஜ் வேறு.

☞ மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவர்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒருவேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனாம்.

விலாசம்:— மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.) தந்திவிலாசம்:—"Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:-T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப் வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசீம் & கம்பெனி, கிள்ளாங், பினாங், சிங்கப்பூர்

ஐயங்கார் புலம்பல்

(திராவிடன் எழுதுவது.)

திருடர்களுக்குள் சண்டை வந்தால் பலதிறப்பட்ட இரகசியங்கள் வெளிவருதல் உண்மை. அத்தன்மைத்தே இப்பொழுது திரு. சீனிவாசய்யங்கார், திரு பிரகாசம், திரு. சத்தியமூர்த்தி முதலியவர்கள் சண்டையிட்டுக் கொள்வதால் பல இரகசியங்கள் புற்றிலிருந்து ஈசல்கள் கிளம்புவனபோல் கிளம்புகின்றன. "காங்கிரஸ் ஆணைக்கு மீறி நீ ஏன் அந்தவிருந்துக்குச் சென்றாய்" என்று ஒருவர் கேட்டால் 'நீ மட்டும் விபசாரித்தனம் செய்யவில்லையா" என்று மற்றொருவர் கேட்கின்றார். திரு. சீனிவாசய்யங்கார் "நீ என்னிடம் பணம் வாங்கிக் கொண்டு என்னையே திட்டுகின்றாய்" என்று திரு பிரகாசத்தின் மேல் பாணம் போடுகிறார். அதற்குத் திரு. பிரகாசம் 'நீ மட்டும் எனக்குப் பணம் கொடுக்கவில்லை, ஜஸ்டிஸ் கட்சியார்கூட கொடுத்திருக்கின்றார்கள்; பணம் பெற்றதினால் உன் குட்டை வெளியிடாதிருக்க முடியுமா?" என்று விடை கொடுத்திருக்கின்றார். இப்படியாகக் காங்கிரசுக்குள்ளே வஞ்ச புராணச் சண்டைகள் நடந்து கொண்டு வருகின்றன.

ஃ ஃ ஃ

காங்கிரஸ் தலைவர் திரு சீனிவாசய்யங்கார் தான் விபசாரம் செய்தாலும் தன்னைக் காங்கிரசிலிருந்து கொண்டு யாரும் தூற்றக் கூடாதென்கிறார்! அதற்கு திரு. பிரகாசம் "உன் விபசாரத் தனத்தை நான் வெளியில் எடுத்துத்தான் உரைப்பேன், வேண்டுமானால் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து அதை வேற்றி என்னைக் காங்கிரசிலிருந்து வெளியேற்றி விடு" என்று விடையிறுக்கின்றார். இப்படியாக இவர்கள் வாய்ச்சண்டைப் படிக்கப் படிக்க மிகவும் இன்பமாய்த்தான் இருக்கின்றது! ஏன் திரு. சீனிவாசய்யங்கார் விபசாரம் செய்ய வேண்டுமா? தான் குற்றம் செய்துவிட்டுப் பிறர் அக்குற்றத்தை வெளியிட்டால் அவர்கள் மேல் ஏன் வேட்டை நாய் போன்று பாயவேண்டும்?

ஃ ஃ ஃ

தன்னைப் புகழ்ந்து கொள்வோன் மக்களுக்குள் ஒரு பதராவான் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. திரு. சீனிவாசய்யங்கார் தம்மை ஒரு தியாகி என்று சொல்லிக் கொள்ளுகின்றார். இவர் தியாகத்தை இவர்தான் மெச்சிக்கொள்ளவேண்டும்! தியாகம் என்பது ஒரு சிறிதும் கிடையாத திரு. சீனிவாசய்யங்காரை அவரே தான் மெச்சிக்கொள்ள வேண்டுமேயன்றி, வேறு எவரும் மெச்ச மாட்டார்கள்! இவர் என்ன தியாகம் செய்திருக்கின்றார்? நாட்டின் விடுதலையின் பொருட்டுச் சிறைக்கோட்டம் நண்ணியிருக்கின்றாரா? அல்லது நாட்டின் விடுதலைக்காக வக்கீல்களெல்லாம் தம் வக்கீல் தொழிலை விட்டு விட வேண்டுமென்ற காலத்துத் தொழிலை விட்டாரா? சட்டசபை பகிஷ்காரம் செய்தாரா? பள்ளிக்கூட பகிஷ்காரம் செய்தாரா? [illegible] குடியை ஒழித்தாரா? மகாத்மாவுக்கு மண்டையில் மூளை இல்லை என்ற இவர் செய்த தியாகம் இவருக்குத்தான் தெரியுமன்றி வேறு எவருக்கும் தெரியாது!

ஃ ஃ ஃ

காங்கிரஸ் பதவியை விட்டுவிடுகின்றேன் என்கிறார், விட்டுவிட்டால் ஆகாயம் கீழே விழுந்து விடுமா? கிழக்கே உதிக்கும்சூரியன் நான் உதிக்கமாட்டேன் என்று சொல்லி விடுமா? காங்கிரசை விட்டு விட்டால் யாரும் வருந்தப் போவதில்லை ஒரு அயோக்கியர் காங்கிரசினின்றும் தொலைந்து விட்டார் என்று எல்லோரும் கூத்தாடத்தான் செய்வர், இப்பூச்சாண்டியை நம்மயில் ஐயங்கார் காட்டவேண்டாம்!

ஃ ஃ ஃ

பொக்குவாயன் பொறியை மெச்சிக்கொண்டானும்! அத்தன்மைத்தே திரு. சீனிவாசய்யங்காரும் தன்னைப் போல் எவரும் காங்கிரசை நடத்த முடியாதென்கிறார். இஃது ஒரு வகையில் உண்மையே! இவரைப் போல் எவரும் காங்கிரசைக் கொண்டு, விபசாரம் செய்ய முடியாத விபசாரம் செய்ததோடு, செய்ததற்காக வெட்கப்படாது அது சரியென்று யாரும் சொல்லவும் முடியாது!

ஃ ஃ ஃ

திரு சீனிவாசய்யங்கார் ஒரு விநோத மனிதர்! அவர் என்ன குற்றம் செய்தாலும் அவரை எவரும் ஒன்றும் சொல்லக் கூடாது! சொன்னால் உடனே தேசத் துரோகி என்று சொல்லிவிடுவார். அவர்களைக் காங்கிரசிலிருந்து வெளியேற்றி விடவேண்டுமென்பார்! திரு. ஹார்னிமனை இதுகாறும் "தேசபக்தர்" என்றார். ஆனால் இப்பொழுதோ திரு சீனிவாசய்யங்காரின் விபசாரத்தை வெளியில் எடுத்து விடுவதால் "அந்நிய நாட்டார்" என்கிறார்.

ஃ ஃ ஃ

குடிவெறியால் பலர் பலவிதமாய் உளறுவதுண்டு. அதுபோன்றே திரு. சீனிவாசய்யங்கார் தம்மைப் பிறர் கண்டிக்கின்றாரே என்ற வெறியில் அறிவிழந்து கூறுகின்றார். பத்திராதிபர்கள் அரசியல் வாதிகளாயிருக்கக் கூடாதாம்! உலகத்தில் பத்திராதிபர்கள்தான் சிறந்த அரசியல் வாதிகளாய் இருக்கின்றார்கள். "சுயராஜ்யா" பத்திரிகையின் ஆசிரியராய திரு பிரகாசம் மட்டும் அரசியல் வாதியாய் இருக்கக் கூடாதா? அலது, "சுதேசமித்திரன்" பத்திராதிபர் திரு ஏ. ரங்கசாமி ஐயங்கார் கூட பத்திராதிபராய் இருக்கக்கூடாதா! தன்னைக் கண்டனம் செய்வோர், தன் குற்றத்தை எடுத்துரைப்போர், அரசியல் வாதிகளாயிருக்கப்படாது போலும்.

ஃ ஃ ஃ

ஐயங்கார் ஒப்பாரி புலம்பல் மிகமோசமாய் இருக்கின்றது! ஏன் விபசாரம் செய்ய வேண்டும்? இப்பொழுது ஏன் புலம்ப வேண்டும்!

பிரமி மந்திரி சபை.

(தமிழ் நாடு எழுதுவது

சென்னையிலுள்ள பிரமி மந்திரி சபை மற்ற மந்திரி சபைகளைப்போலல்ல தேவலோகப் பிறவியாக மதிக்கப்படுகிறது. சுயராஜ்பக் கட்சியார் பிரமி மந்திரி சபையைப் போல சென்னை மாகாணத்தைக் காப்பது வேறு கிடையாதென்று சொல்லி வருகிறார்கள்; அதை ஆதரித்தும் வருகிறார்கள். அதை ஆதரிப்பதற்கு காங்கிரஸ் தலைவரான ஸ்ரீ சீனிவாச ஐயங்காரென்ன, சின்ன காந்தி என்று பெயர் பெற்ற ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியென்ன, இவர்களெல்லாம் இரவு பகலென்று பாராமல் அந்த மந்திரி சபையை உருப்படுத்தினார்கள். அது அமைக்கப்பட்டவுடன், தேசத்தில் கள்ளு சாராயமே கிடைக்காதென்றும் எங்கும் கத்தர் மயமாய் விளங்குமென்றும், சுயராஜ்யம் போய் விடுமென்றும் பசுவும் புலியும் ஒரே துறையில் நின்று தண்ணீர் குடிக்குமென்றும் சொல்லப்பட்டது. எல்லாம் முடிந்தது. கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் தெரியும் என்ற கதையாய் முடிந்தது. ஜஸ்டிஸ் கட்சியைத் தொலைப்பதற்காக காங்கிரஸ் பிராமணர் செய்த சூழ்ச்சியைத் தவிர மற்றப்படி பிரமி மந்திரி சபை மற்ற மந்திரி சபைகளைவிட பிற்போக்கில் எவ்விதத்திலும் பின்வாங்கியதல்ல என்பது வெளியாகிவிட்டது. சேலம் ஜில்லா போர்டு தேர்தல் விஷயத்தில் அது நடந்துகொண்ட விதத்தை நண்பர்கள் அறிவார்கள். பின்னால் வேலூர் முனிசிபல் சபையார் கத்தர் நிதிக்கு கொடுத்த 50 ரூபாயை ஜில்லா கலெக்டர் மறுத்துவிட்டார். அதையும் பார்த்துக்கொண்டு பிரமி சபை இருந்தது. இப்பொழுது நேராகவே கத்தர் இயக்கத்திற்கு விரோதமாக பிரமி மந்திரி சபைத் தலைவரான டாக்டர் சுப்பராயன் இறங்கிவிட்டாரென்று தெரிகிறது. திருவண்ணாமலை முனிசிபாலிட்டியார் கத்தர் நிதிக்கு பணங் கொடுக்க விரும்பியதைத் தடுத்துவிட்டார். தூத்துக்குடி முனிசிபாலிட்டியார் காந்தி படம் வைக்கவேண்டுமென்பதை கூடாதென்று சொல்லிவிட்டாராம். அதுமட்டுமா? மதுரை தாலூகா போர்டுகள் எல்லாவற்றிற்கும் ஒரு உத்தரவு அனுப்பியிருக்கிறாராம். அதாவது காந்திக்கு போர்டு பணத்திலிருந்து உபசாரப் பத்திரம் படித்துக்கொடுக்கக்கூடாதாம். டாக்டர் சுப்பராயனை முதல் மந்திரியாக்கிவிட பகீரதப் பிரயத்தனஞ் செய்த ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி, பாவம்! இவற்றையெல்லாம் பார்த்தும் பார்க்காததுபோல நித்திரையில் இருந்துகொண்டிருக்கிறார். "பனகல் ராஜா காந்தியை அவமதித்துவிட்டார். காந்தி படத்தை வைக்கக்கூடாதென்று சொல்லிவிட்டார். கத்தரை அலட்சியஞ்செய்கிறார். ஆகையால் எங்களுக்கு ஓட் கொடுங்கள்" என்று தேர்தல் காலத்தில் ஆர்ப்பாட்டஞ்செய்த சுயராஜ்யக் கட்சியாரும், அவர்கள் பத்திரிகைகளும் இவைகளைப் பார்த்துக்கொண்டு மௌனஞ் சாதிக்[illegible]

[இதன் தொடர்ச்சியை 16-ம் பக்கம் பார்க்க]

அவியல்.

4ம் பாகம்

[கைவல்ய சாமியார் எழுதுவது]

சந்திரன்.—உன் கேள்விக்குப் பதில் சொல்லிக்கொண்டு வருகிறேன். கேட்டதைப் பொறுமனதிற்குக் கொண்டுவந்து ஆலோசித்துப் பார்ப்பாயேயானால் அதனுண்மைவிளங்கும் பழைய சாஸ்திரங்களில்சொல்லியுள்ளபிராமண தருமத்தையும் க்ஷத்திரிய நீதியையும் சுருக்கமாகச் சொல்லுகிறேன். அரசன் அறம் பொருள்களை சேர்ப்பது மிக்க கடினமென்றறிந்து உத்தமனான பிராமணனைச் சீக்கிரம் புரோகிதனாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும், தர்ம புத்தியுள்ளவரும் மந்திர சக்தியுள்ளவருமானவரை புரோகிதராகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். தர்மபுத்தியுள்ளவரும் மந்திர சக்தியுள்ளவருமான புரோகிதர் எந்த அரசர்களிடமிருக்கிறாரோ அவர்கட்கு அறம்பொருளின்பங்கள் பயன்படுவது திண்ணம். நல்ல புரோகிதனில்லாத அரசன் எச்சலுக்கு ஒப்பாவான். ராக்ஷஸர்களும் அசுரர்களும் பிசாசுகளும் சர்ப்பங்களும் பறவைகளும் பகையாளிகளும் அரசனைக் கொல்லுவார்கள். அதர்வண வேத மறிந்த பிராமணன் எல்லாவித யாகங்களிலும் அரசனுக்கு பிரம்மத்வமென்னும் வேலையைச் செய்யவேண்டும். அதர்வண வேதத்தில் சொல்லியபடி எல்லாக் கர்மங்களையும் செய்விக்கவேண்டும். இயற்கையான கர்மங்களையும் பெரிய உத்பாதங்களையும் தோஷங்களையும் இஷ்டமான சுபகர்மங்களையும் அந்தப்புரத்திற்குரிய வேலைகளையும் எப்பொழுதும் அரசனுக்கு அறிவிக்கவேண்டும், புரோகிதன் அரசனுக்கு விருப்பமுள்ள சங்கீத நாட்டிய காரியங்களில் செய்யத்தக்கதை அறிவிப்பதுடன் வைசுவதேவ பலியையும் பர்வ காலங்களில் செய்யத்தக்க பெரிய சாந்தியையும் தனக்கும் அரசனுக்கும் இதமும் பிரியமுமான ருத்திர தேவனைக் குறித்த ஸகஸ்ர ஹோமத்தையும் செய்யவேண்டும். அரசர்கள் எழுவித பாவங்கள் அடைகின்றனர். 1. அமைச்சர்கள் கெட்டகாரியம் செய்வதும் 2. மந்திரிகள் உதவியில்லாமலிருப்பதும் 3. வியவகார அதிகாரிகள் தம் நீதியை விட்டு பரிதானம்(லஞ்சம்) வாங்குவதும்; 4. குற்றமில்லாதவனைத் தண்டிப்பதும்; 5. குற்றமுள்ளவனை விடுவதும்; 6. யுத்தமில்லாத இடத்தில் இம்சிப்பதும்; 7. கெட்ட சேவகர்களால் பிராணிகளுக்கு நேரிடும் துன்பமுமாம். இந்த எழுவித பாவத்திலிருந்து அரசனைக்காப்பாற்ற அதர்வண வேதத்தின் விதிகளை அறிந்த புரோகிதன் ருத்ர ஹோமங்களாலும் மகா சாந்தியாலும் கிருதம்பலமென்னும் கர்மத்தினாலும் சுத்தீகரித்து எழு பாவங்களிலிருந்து விடுதலையடைந்த அரசன் புரோகிதர்களுடன் சொர்க்கம் போகிறான்.

அரசர்களுக்கு வேண்டிய (1) சாந்திகம் (2) பௌஷ்டிகம் (3) ஆபிசாரம் என்ற மூன்று இடங்களுக்குத் தக்க விதிகள் ரிக்வேதத்திலும் சாப சுக்லயசுர் வேதத்திலும் கூறப்படவில்லை. பெரியவரான யாக்ஞவல்க்யர் அபிப்பிராயப்படி ரிக்வேதம், சாமவேதம், சுக்லயசுர் வேதம் இவைகளைத் தனித்தனி கற்ற மூன்று பேர்களையும் அரசன் புரோகிதனாக வகிக்கக்கூடாது. பிராமணரல்லாத ஜாதிகளிடமிருக்கும் சுக்லயசுர் வேதத்திலுள்ள மந்திரங்களை எப்பொழுதும் அரசன் சாந்திகம் பௌஷ்டிக மென்னும் கர்மங்களில் உபயோகப்படுத்தக்கூடாது. பிராமணனுக்கும் க்ஷத்திரியனுக்கும் நான்கு வேதங்களையும் படிப்பதில் விரோதமில்லை என்று பிராமணர்கள் அறிவிக்கிறார்கள். ஆகிலும் வேதங்களைக் கற்ற பிராமணன் ஒருவனே அரசனுக்குப் புரோகிதனயிருக்கத்தக்கவன். இங்குதான் நீ குறிப்பாகக் கவனிக்கவேண்டும். சாந்திகமென்பது தனக்குள்ள துன்பங்களை விலக்கத்தக்க கர்மம். பௌஷ்டிகம் தன் ராஜ்யத்திற்கு வளர்ச்சியைக் கொடுக்கும் கர்மம். ஆபிசாரமென்பது பகையாளியைக் கொல்லத்தக்க கர்மம். அதர்வண வேதத்தில் அதிகமாக யாகங்களைப்பற்றியும் தக்ஷிணைதானமாகக்கொடுக்கவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவுமல்லாமல் சாந்திகம் பௌஷ்டிகமென்னும் கர்மங்களுக்குநெருப்பில் நெய்யை ஊற்றி அக்கினியை மூட்டி ஆகாசத்தைப்பார்த்து ராஜாவும் இவன் ராஜ்யமும் க்ஷேமமாக இருக்கட்டுமென்று சொன்னால் போதும். ஆபிசாரமென்னும் கர்மம் அப்படியல்ல, பகைவரைக் கொல்லவேண்டும். வெறும் மந்திர சடங்கும் அபிநயமும் இதில் பிரயோஜனப்படாது. பகையாளி கொல்லப்படவேண்டும். இதை உத்தேசித்துதான் வேதம்படித்தவன் யாரிருந்தாலும் இந்தக் கர்மத்தை செய்யலாமென்று விதித்து முன்சொன்ன இரண்டும் பிராமணன் ஒழிய வேதம் வாசித்தவன் யாராயிருந்தாலும் செய்யக்கூடாது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு கர்மத்தாலும் பிரத்தியக்ஷ அனுபோகமொன்றுமில்லை. இனிமேல் நல்ல காலந்தான் என்று சோதிடம் சொல்லுவதுபோல் அபிசாரமென்பது அப்படியல்ல. வயிற்றுவலி வந்தவுடன் வைத்தியத்தில் உடனே குணம் காண்பதுபோல் அபிசார கர்மத்தின் பலமும் பிரத்தியக்ஷத்தில் அனுபோகம் வேண்டும். இதை உத்தேசித்தே பழியை ஒருவன் மேல் சாற்றி ஆனகாரியத்தில் தன்னைக் காட்டி லாபமடைபவன் பாப்பாரக் குணமாத்திரம். ஆபிசார கர்மம் வேதம் வாசித்தவர்கள் யாரும் செய்யலாம் என்று சொல்லிற்று. படிப்பவர்களுக்கு விபரம் தெரிந்து கொண்டாலும் உனக்கு சொல்லவேண்டியதைச் சொல்லவேண்டும். 'க்ஷத்திரியன் பிராமணனை விரோதிப்பானாகில் க்ஷத்திரிய ராஜ்யம் பாழடையும். பிராமணர்களை விலக்கின க்ஷத்திரியனுக்கு வேதமும் சந்ததிகளும் வளரமாட்டா. பசுக்களும் நாசமடையும். யுத்தத்தில் ஜயம்பெறமாட்டார்கள். வீட்டில் ஒருபோதும் பொருள் விருத்தியடையாது. க்ஷத்திரியர்கள் திருடர்களாகவும் வக்கிர ரூபிகளாகவும் ஆவார்கள்" என்று பலவிதமாக சாஸ்திரங்களில் எழுதப்பட்டு க்ஷத்திரியனுக்கு பிராமண உபாத்தியாயர்களால் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. வேதம், பிராமணம், உலகம், சடங்கு என்பதற்கு அநேக இடங்களில் பிர்மம் என்னும் பதத்தையே உபயோகித்திருப்பதினால் பிர்மம் என்னும் பதம் வரும் இடங்களில்பிராமணனையே விசேஷப்படுத்தி வியாக்யானம்செய்வது பாப்பாரத்தன்னலம். க்ஷத்திரியன் இன்றுதர்மத்தை அனுசரித்தே ஆகவேண்டும். இந்த தர்மமெல்லாம் பாப்பானுடைய ஆக்கினையில் அகப்பட்டது தன்னலமான வைதிகச் சடங்கிலேயே க்ஷத்திரியன் பிராமணனால் பழக்கப்பட்டிருந்தபடியால் சத்துருக்களால் தோற்கடிக்கப்பட்டான். மந்திரயாகங்களும் கர்மங்களும் தட்சணைகளும் தேவதைகளும் சத்துருயுத்தத்திற்கு முன்னால் ஓடி விட்டது. தற்காலம் நடக்கும் இந்து ராஜாங்கத்தை நினைத்துப்பார்ப்பாயானால் பழைய இந்து ராஜாங்கம் நடந்திருக்கும் விதமும் அதி நாசமான விதமும் விளங்கும் சிவாஜி ராஜா பிராமணர்களைத் திருப்தி செய்ய பொக்கிஷத்தையெல்லாம் செலவு செய்துகுன்றினதும் மைசூர் ராஜா பிராமண வைதீகச் சடங்கிலேயே முழுகி மற்றபிரஜைகளைப் பிரித்து ஒற்றுமையில்லாமலிருந்தமையால் ஐதராலியை எதிர்க்கச் சக்தியற்றதும் தஞ்சாவூர் ராஜாக்கள் கோவில் கட்டுவதிலும்பிராமண சத்திரங்கள் கட்டுவதிலும் காலத்தைப்போக்கிச் சேனையைச் சேர்க்காமல் பிராமணப்புரோகிதர்களால் வைதீகப் பூஜையை மேற்கொண்டிருந்தமையால் ராமேஸ்வர யாத்திரை வந்த மராட்டிய கூட்டத்தார் தஞ்சாவூரைப்பிடித்துக் கொண்டார்கள். போர்ச் சேவகர்களான வடுகரும் ஆளினப்பேர்படைத்த சூரிய குலக் கள்ளரும் படையை ஆட்சிசெய்யும் படையாச்சிகளும்கோட்டை உள்படையின் வீரர்களான அகம்படையர்களும் போர்க்குணமுடைய சான்றார்களென்னும் நாடார்களும் இனியும் வீரம்பொருந்திய தமிழ் கூட்டத்து மக்கள் நிறைந்திருக்கும் ராச்சியத்தில் யாத்திரை போக வந்த மராட்டியக் கூட்டத்தார் கோட்டைக்குள் நுழையப் போகிறார்கள் என்று கேட்ட உடனே புரோகிதனும் பிராமணனும் ராஜாவுக்கு "அவர்கள் வரும் கோட்டைவாசலில் துளசியைக் கொட்டி விட்டால் வரமாட்டார்கள். துளசியைத் தாண்டுவது மகாபாவம்" என்று மந்திராலோசனை சொல்ல அவ்விதமே பூசைக்கு வந்திருந்த துளசியை எல்லாம் மராட்டியர் வரும் வழியில் கொட்டினார்கள். துளசியை மிதிக்கப்படாது தாண்டப்படாது அப்படிச்செய்தால் பாவம்" என்பது வைஷ்ணவத்தில் சொல்லிக்கொள்ளுவதும், தஞ்சாவூர் ராஜாக்களுக்கு உபதேசிக்கப்பட்டதும் மராட்டியனுக்கு துளசியைப்பத்தி என்ன கவலை? வந்தான் ராஜா சத்தியம் கெட்டவன் முகத்தைப் பார்க்கக் கூடாது என்று பின் வழி போய் விட்டார். சிம்மாசனத்திலேறி உட்கார்ந்து கொண்டான். மராட்டியனும் இந்து மதத்தை அனுசரிப்பவன். அங்கிருந்த பார்ப்பானெல்லாம் ஆசி கூறினார்கள். சில சுலோகம் சொல்லி அர்த்தமும் பண்ணி பூரண கும்பமுமெடுத்தார்கள் அந்தச் சமயம் ஆயுதங்களெல்லாம் ஆயுத பூசைக்கு அடுக்கப்பட்டிருந்தது. முதலே கடைசிப் பூசை ஆகாமல் ஆயுதத்தை எடுக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். மராட்டியன் வந்து ஆயுத சாலை எங்கே என்று கேட்ட உடனே அப்பொழுதே பிரித்து அவன் கையில் கொடுத்து விட்டார்கள். சையிசர்யங்களைச் சேர்த்து ஜனங்களை எல்லாம் சமத்துவமாக நடத்துவதை விட்டு விட்டு கோவில் கட்டுவதும் பார்ப்பான் வைதீகத்திற்கு வேண்டியபடி நடப்பதும் சத்துருவந்தால் துளசியை ஆயுதமாக்கும் உபதேசம் கேட்டு வந்த தஞ்சாவூர் இராஜகுடும்பம் ஒழிந்ததே ஒழிய அதைக் கெடுத்த பார்ப்பான் ஒழியவேயில்லை. மராட்டியராஜர்களிடமும் ஏராளமான சுகபோகங்களை அனுபவித்து அவர்களையொழித்து சூத்திரர்கள் என்று மராட்டிய ராஜாக்களுக்கு ஒரு பேரும் வாங்கிக் கொடுத்தார்கள் இதற்சமயம் தான் ஒரு வித்வான் 'பாப்பான் பெருத்து வடுகன் துரைத்தனம், பாழ்த்தது தேசம்" என்று பாடினான். இந்தக்கதைகளெல்லாம் உனக்குத் தெரியும். இப்பொழுது நடக்கும் இந்து ராச்சியங்கள் தான் எப்படி நடக்கிறது? ஆலோசித்துப் பார். மைசூர் மகாராஜா வைதீகப் பிரகாரம் நடப்பவர். பிராமணனையும் சமாராதனையும் தவறுவதில்லை. சாமுண்டீச்வரியின் கோவிலுக்குப் போகாத நாளில்லை. இதுதான் இவருக்குப்பெருமை. இன்டோர்மகாராஜா சக்கரவர்த்தி முடி சூட்டுக்குப் போனபொழுது சீமைக்கு கப்பல் நிறைய தண்ணிகொண்டுபோன வைதீகர். கொச்சி ராஜா ஒரு நம்பூதரிப். பிராமணப்பெண் விபசார நிமித்தம் அவளிடம்சம்பந்தப்பட்ட அநேகபுருஷர்களைத்தேசபிரஷ்டம் செய்ததும் பிராமணப்பந்தியை எட்டிப்பார்க்கவிட்டதும் அவருக்குப் பெருமை. திருவனந்தபுரத்து ராஜாங்கத்தில் அநேக ஆயிரம் பிராமணர்களுக்குசாப்பாடுபோடுவதும் அந்தப்பந்தியில் தான்கூடப்பதும் அவருக்குப் பெருமை. திருவனந்தபுரவாசிகள் தொழிலில்லாமல் அநேக தேசங்களுக்குப் போய் கஷ்டப்படுகிறார்கள் வெளியூர்களிலிருக்கும் பாப்பாரகளெல்லாம் திருவனந்தபுரம் ராஜ சத்திரத்தில் உண்டு படித்து அந்த ஊரைக் கெடுக்கிறார்கள். பிராமண சமாராதனையும் பிரயோஜனமற்ற வீண் வைதீகச்சடங்கும் டிப்பு

[இதன் தொடர்ச்சியை 14-ம் பக்கம் பார்க்க.]

கடவுளும் ஆலயங்களும்.

(ஸ்ரீ தர சுவாமி எழுதுகிறார்)

ஆதி முழுமுதல் பொருளாய், அகண்டமாய், அஞ்ஞானம் சூழிருளகற்றி மெய்ஞானச் சுடரொளியாய், மக்களின் ஆணவம் காமியம் மாயையெனும் மும்மலங்களுக்கு மருந்தாய், பேரின்பப் பிழைப்பாய் துன்பத்தை நீக்கி இன்பத்தை ஆக்கி இரக்ஷிக்கும் பக்ஷபாதமற்ற பரமபிதா ஒருவர் உண்டென்பது உண்மை நூல்களின் துணிபாம்.

பண்டைப் பெரியார் யோக சக்தியால் கடவுள் லக்ஷியங்களை தங்கள் தேகத்தினிடம் சாக்ஷியாகக் கண்டதால் தேகம் கடவுளின் ஆலயம் என்று கூறியுள்ளார்கள். இதை இங்கு விவரிப்பாம். "தேஹோ தேவாலயப்ரோக்த" என்றதால் தேஹமே கடவுளின் ஆலயமென்றும், "சர்வ சக்தி மயோஹி ஆத்மா" என்றதால் ஆத்மா சர்வ சக்தி மயனென்றும் இயம்பினார்கள், ஆகவே சர்வ சக்தி மயனும் ஆண்டவனுக்கு தேஹம்தான் ஆலயமென்று ஏற்பட்டது. மேலும் "ஈஸ்வரஸ்ஸர்வ பூதானாம் ஹ்ருத்தேசேர்ஜுன திஷ்டதி" என்று கீதையில் பகவானும் அருளினார். இதன் கருத்து:— ஏ அர்ஜுனா ஈஸ்வரன் எல்லா ஜீவர்களின் ஹ்ருதயஸ்தானத்திலும் நிவஸிக்கின்றார் என்பதாம். "நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்" என்றும் "கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே" என்றும் சிவவாக்கியரும் "கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே" என்று பட்டினத்தடிகளும் "மாகுணங்குடிவாழ மென்னகத்தீசனை" என்று குணங்குடியாரும் கூறினார்கள். இப்பெரியார்களின் பேருரைகளாலும் பரமனுடைய ஆலயம் சரீரமெனப் பெறப்பட்டது.

ஆலயமென்பதை ஆ-லயம் என்று பகுத்துப்பார்க்கின் ஆ—பசு, லயம்—லீனமாதல் (லயமடைவது) அதாவது:—பதி, பசு, பாசம் என்ற தத்துவமுறையில் பதியைக் கடவுளாகவும், பசுவை மனதாகவும், கருதப்பட்டமையால், பதியாம் பரமனிடத்து, பசுவாம் மனதை லயப்படுத்துவதுதான் ஆலயமென்றாயிற்று. ஆலயத்தின் உண்மை இவ்வாறெனினும் ஆத்மா, மனஸ், தேஹம் முதலானவைகளின் இயற்கையமைப்பை அறிவது அரிதினும் அரிதெனக்கருதி சரிமுறையில் கோயில்களை அமைத்துக்காட்டி பாமர மக்கட்கு கடவுளின் தன்மையை அறியச் செய்வதற்காக ஆலயங்களை அமைத்துள்ளார்களென்று சிலர் கருதுகின்றனர். இது ஒரு சந்தேகத்தை நிவர்த்திக்கவேண்டி பல சந்தேகங்களை வளர்க்கச் செய்வதாகும். ஆத்மா மனஸ், தேஹம் முதலானவைகளின் உண்மையை உள்ளது உள்ளபடி உபதேசித்தால் யாவரும் உணர்ந்து கொள்வார்கள். ஆத்ம விஷயங்களை அறியச்செய்ய அதற்காம் ஆகமஞான நூல்களை எடுத்துரைப்பதே ஆத்ம ஞானத்திற்குச் சிறந்த சாதனமாயிருக்க, அதற்கு மாறாக அஞ்ஞானங்களை விர்த்தி செய்யும் ஆலயங்களை அமைப்பதால் ஆத்ம ஞானம் உண்டாகுமென்பது அறியாமையே! ஆத்மஞானம் [illegible]னால் உண்டாவதன்றி ஆலயங்களால் ஆகாதென்பது ஆன்றோர்களின் அனுபவம், உருவநாமம் இல்லாத இயற்கைக் கடவுளுக்கு உருவ நாமங்களைக் கற்பிக்கவும் நல்லருள் கடவுளை கல்லாகக் காட்டவும், வேண்டும் வேண்டாமையற்றவர்க்கு விருப்பமுற்ற பெண்டு பிள்ளைகள் உண்டென்று புகல்வதும், வேடிக்கையும் பகட்டுமில்லா இறைவனுக்கு வாணவேடிக்கை காட்டி வயிற்றுவளர்க்க துணிவதுமல்லால் வேறொரு பயனும் விளையப்போவதில்லை. அந்தோ இத்தகைய அர்த்தமற்ற வார்த்தைகளை மூடருக்கு வித்தென்று மொழியும் ஆரியக்கூற்றை மறக்கச்சற்றும் தாமதம் வேண்டாம் வேண்டாம். தாமதித்தால் தீவினை சூழும். உண்மைக்கு மாறான உபமானங்களை முன்பின் முரண்பட மொழியும் மூடக்கொள்கைகளை நாடியிருத்தல் முத்தி மார்க்கத்திற்கு முற்றும் கேடாம்.

"அறவாழி யந்தணன்றாள் சேர்ந்தார்க்கல்லால் பிறவாழி நீந்தலரிது" என்ற தெய்வப்புலமை திருவள்ளுவனார் திருவாக்கால் ஆண்டவனிடம் இரண்டறக் கலந்தார்க்கன்றி பிறவி பெருங்கடலை நீந்துவதரிது என்றார். இரண்டறக் கலந்து கொள்ளும் தன்மையை நம் கோயில்களில் காண்பதுவும் முயல் கொம்புதான் "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை பற்றுக பற்றுவிடற்கு" என்றதால், நம பற்றுகள் ஒழிய பற்றற்றான் பற்றினை பற்றவேண்டும் என்றார் பற்றில்லாக் கடவுளைப் பற்றவேண்டியிருக்க, பற்றுள்ள கடவுளை பற்றுவதெங்ஙனம்? பற்றினால் நம் பற்று நீங்குவதெங்ஙனம்? எவ்வித பற்றுதலுமில்லாத இறைவனுக்கு அநேக பற்றுதல் உண்டென்று இயம்புவது அறிவீனம்.

மோட்சமடைய சகுணோபாசனையென்றும், நிற்குணோபாசனை என்றும் இருவித பாகுபாடுகள் உண்டு. சகுணோபாசனையென்பது உருவத்தியானமென்றும். நிற்குணோபாசனை என்பது அருவத்தியானமென்றும் அறிஞர்கள் உரைக்கின்றனர்கள். பற்பல நாமரூபங்களில் பழகி வந்த மனதை இறைவனின் ஒருவென்றோருருவமைத்து அதை மனத்துள் பதித்துத்தியானம் செய்துவரின், அளவிலா நாமரூபங்களில் பாவிநின்ற மனது தெளிவாய் ஓர் உருவில் நிலைக்க ஏதுவாயிருக்கும். அதனால் ஏகாக்ர சித்த சக்தி உண்டாம். பின்னர் நிற்குணோபாசனை செய்வது நற்பயனளிக்கும். உருவத்தியானமில்லேல் அருவத்தியானம் ஆகாது. என்ற பற்பல நியாயங்களைக் கருதி ஆலயங்களை அமைத்தனரென்று சிலர் கூறுகின்றனர்

சித்திக்காகவோ, முக்திக்காகவோ முதல்வனை நத்திபக்தி செய்வது நற்பயனைத்தருமென்பது யுக்திக்கொத்ததாம். ஆனால் அது தனக்காக மற்றொருவர் செய்வது தகாது. "க்ஷுதாதிக்ருததாகந்து விசேஷேண ந கேனசித்" என்ற ஆத்மபோதி நியாயப் பசி, தாகம் முதலியவைகளுக்கு அன்னம், தண்ணீர் முதலானவைகளைத் தனக்காக மற்றொருவர் ஏற்றுக்கொண்டால் தன் பசியும், தாகமும் தணியாது. அதுபோல் மோட்சமடைய வேண்டின் சாட்சியாய் பரமனை—நாமே பூசிக்கவேண்டும். தன் குறைகளை தானே இறைவனிடம் முறையிடுவதுதான் முதன்மையான கடமையாம். இவ்வாறின்றி, சூத்திரன் பூசித்தால் சாமி செத்துவிடுமென்று சூழ்ச்சி நூல்களியற்றியும், இறைவனை நாம் இறைஞ்சினால் இன்னல் விளையுமென்றியம்பியும், பார்ப்பனர்களைப் பணிவதே சூத்திரனுடைய பணியென்று பிதற்றியும், உங்கள் குறைகளை இறைவனிடம் எடுத்துரைக்க நாங்களே முறைமையாளர்களென்று கூறியுந்திரியும் ஆரியப்பேய்களாலேமாற்றமடைவதல்லால் ஆலயங்களால் ஆனபயனென்ன? இறைவனெல்லோர்க்கும் உரித்தானவனாயிருக்க ஒரு கூட்டத்தார்களுக்குமட்டும் சொந்தமென்று சொல்வது விந்தையினும் விந்தையே!

"யே பஜந்திதுமாம் பக்தியா மயிதே
தேஷுசாப் யஹம்"

என்று கீதையில் பகவான் கூறுகின்றார். இதன் கருத்து:—யாவனொருவன் என்னை உண்மையான பக்தியுடன் பூசிக்கின்றானோ அவனிடம் யானும், என்னிடம் அவனும் சமத்துவமாயிருக்கின்றோம். என்பதாம்

பஜன் பக்தியாவிஹீனோப: சண்டாலோ ப்ரியதே
சண்டாலோபி பஜன் பக்தியா ப்ராமமணோப்யோத்தமம.

என்று கணேச கீதையில் கூறுகின்றன இதன் கருத்து:— யாவனொருவன் என்னை பக்தியில்லாமல் பூஜிக்கின்றானோ? அவன் பிராம்மணனென்று சொல்லப்படுவோனாயினும் சண்டாளனாகின்றான் சண்டாளனென்று சொல்லப்படுவோனாயினும், பக்தியுடன் பூஜிப்பானேயானால் அவனை பிராம்மணனைவிட மேலானவனென்று கருதப்படும்.

பஹூனாத்ர கிமுக்தேன யஸ்யபக்திசிவார்ச்சனே
ஸவாத்ராதி காரிஸ்யாத் நான்ய சித்த ஸ்தாசனே

என்று சிவ கீதையிலும் கூறப்பட்டிருக்கின்றன, இதன் கருத்து அதிகமாகச் சொல்வானேன், யாவனொருவனுக்கு ஈசனை பூசிக்க நேசமிருக்கின்றதோ அவன் எவனாயினும் கடவுளை பூசிக்க உரிமையுடையவனாகின்றான் என்பதாம் அன்பர்களே! மேல் விவரித்த சுருதிகளின் ரீதியாய் எந்த மனிதர்களும் இறைவனை பூசிக்க சொந்த முடையவர்கள் தானென்பது வெளிப்படையல்லவா? அந்தோ உண்மை சுருதிகள் உரைப்பதென்ன நமமவர்கள் சொல்வதென்ன? இப்பார்ப்பனர்கள் செய்வதென்ன? அநியாயம் அநியாயம்.

நம்குறைகளை நம் பிதாவிடம் முறையிடவோ? அவரைப்பூசிக்கவோ நாம் உரிமையுடையோர்களன்று என்று கூறும ஆரியர்களின் கூற்று நன்று என்று கருதினீர்கள் போலும், தேச பாஷையறியாத ஒரு நீதிபதியினிடம் வழக்கைத் தொடுத்தால், இரு பாஷைகளையும் அறிந்த ஒரு வக்கீல் தரகர் அவசியமெனக்கருதுவது போல் இறைவனையும் கருதுகின்றீர்களா? அன்று அன்று அவன் சர்வக்ஞன் சர்வவியாபி ஸர்வபரிபூரணன் யார் எதைக்கூறினாலும் நினைத்தாலும் அறிபவன் ஏழைகளுக்கிரங்கும் இனிய குணமுடையவனென்று உண்மை நூலகள் உரைக்கின்றன. எங்கும் நிறைந்தவனென்றால் ஏன் அவனைக்காணமுடியவில்லையென்று

இதன் தொடர்ச்சி 13பக்கம்பார்க்க

ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்களும் ஒரு மனிதர் தானா?

அவரை தெரிந்தெடுத்த யூனிவர்சிட்டி வாக்காளர்களே உங்களுக்கு வெட்கமே இல்லையா?

ஸ்ரீ சத்தியமூர்த்தியைப் பற்றி நாம் எழுதுவதும், பேசுவதும் நமக்கே மிகவும் மதிப்புக் குறைவான விஷயமானாலும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியைப் பற்றி அவர்கள் ஒரு தனிப்பட்ட பார்ப்பன நபர் என்கிற முறையில் பேச வரவில்லை. உலகத்தில் ஸ்ரீ சத்தியமூர்த்தியை விட மோசமானவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அவர்களைப்பற்றி எல்லாம் பேசிக்கொண்டிருப்பது என்பது பைத்தியக்காரத் தனமும், உபயோக மற்ற வேலையும் தவிர வேறொன்றும் இல்லை. ஆனால் இப்போது ஸ்ரீமான் சத்தியமூர்த்தியைப்பற்றி நாம் எந்த முறையில் பேசுகிறோம் என்றால் சென்னை ராஜதானியில் உள்ள படித்தவர்கள் என்று சொல்லக் கூடியவர்களான பி. ஏ. பி. எல்., எம். ஏ. எம். எல். முதலிய படிப்பு பட்டங்கள் பெற்றவர்களாகவும் சர்வகலாசாலைகளை நடத்தும் பண்டிதர்களான அங்கத்தினர்களும் சென்னை மாகாணத்தின் நாலரைக் கோடி மக்களுக்கு பிரதிநிதியாக மேல்படி மக்களின் கல்விஸ்தாபனங்களின் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுத்ததால் நமது பிரதிநிதி என்றவரின் யோக்கியதை என்கிற முறையில் 4½ கோடி மக்களின் பிரதிநிதிக சபைஎன்கிற சென்னைசட்ட சபைக்கு 33 கோடிமக்களின் பிரதிநிதி சபை என்கிற காங்கிரசு சபையில் தெரிந்தெடுக்கப்பட்ட சட்டசபையில் உபதலைவராக தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார் என்கிற முறையிலும் மேற்படி படித்தவர்களான சர்வகலாசாலை பட்டம் பெற்றவர்களும கலாசாலை அங்கத்தினர்களும் பெருமபாலும் பார்ப்பனர்களாயிருப்பதால் பார்ப்பனர்கள் தங்களுக்கு தெரிந்தெடுக்கும் யோக்கியதை வந்த காலத்தில் நமக்கு பிரதிநிதியாக எப்பேற்பட்ட யோக்கியர்களை தெரிந்தெடுக்கிறார்கள் என்பதை காட்டவும் அதுபோலவும் காங்கிரசு என்பதும் பார்ப்பன அக்கிராரமாயிருப்பதால் தங்களுக்கு தெரிந்தெடுக்கும் யோககியதை வந்தவுடன் அப்பார்ப்பனர்கள் எப்பேர்ப்பட்டவர்களை தலைவர்களாய் நியமிப்பார்கள் என்பதை காட்டவும் சில வார்த்தைகள் சொல்லவேண்டியது கடசியாயிருக்கிறதே அல்லாமல் வேறலல. ஆகவே அவரின்யோககிதையைப் பாருங்கள் இதற்குமுன் ஸ்ரீமான் சத்திய மூர்த்தி எத்தனையோ தடவை என்ன என்ன விஷயங்களைப்பற்றியோ பேசி அவமானப்பட்டார் என்பதும் மன்னிப்பு கேட்டுக்கொண்டார் என்பதும் நன்றாய்த் தெரிந்தவிஷயம்.

இப்போது அவரின் நிலைமையை யோசித்துப்பாருங்கள் சுயராஜ்ஜியக்கக்ஷி கொள்கைப்படி அரசாங்க அங்கத்தினர்கள் செய்யும் விருந்துகளிலும் அரசாங்க அங்கத்தினர்களுக்கு செய்யும் விருந்துகளிலும சுயராஜ்ஜியக கட்சியார் சம்பந்தப்படக்கூடாது என்பது அவர்கள் கொள்கை.

அப்படி இருக்க அரசாங்க மந்திரிக்கு ஸ்ரீமான் சத்திய மூர்த்தி விருந்து நடத்துவானேன் அவ்விருந்தில் அரசாங்கசமபந்தமான பேச்சுகள் பேசுவானேன் இதற்கு பெயர்தானா மூட்டுக்கட்டை ஒத்துழையாமை என்பது?

இவைகள் "அபிப்பிராயபேதம் என்று சொல்லிக்கொள்ளலாம்.

ஆனால் கோக்கலே ஹால் மீட்டிங்கில் அக்கிராசனம் வகித்த சமயத்தில் ஜஸ்டிஸ் கக்ஷியைப் பற்றி பேசும்போது "இப்போதுள்ள சட்ட சபையில் தாங்கள் மந்திரிபதவிகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று ஜஸ்டிஸ்கக்ஷியின் தலைவர் சொன்னார். அப்படிச் சொன்ன அன்றே தன்னை அழைத்து மந்திரி சபையை அமைக்கச் சொல்லவேண்டுமென்று கவர்னரின் அந்தரங்க காரியதரிசிக்கும் பனகால் அரசர் ரகசியமாய் யோசனை சொல்லிக்கொண்டிருந்தார்" என்று பேசியிருக்கிறார் இதைமுழுப் பொய்யென்றும் "தான் பொய்யனல்ல என்று ஸ்ரீமான் சத்திய மூர்த்தி நிரூபிக்கும்வரை ஸ்ரீ சத்திய மூர்த்தியை இனி பொய்யன் என்றுதான் அழைப்போம்" என்றும் ஜஸ்டிஸ் திராவிடன் பத்திரிகை எழுதிவருகிறது இதற்கு என்ன சமாதானம் ஸ்ரீ மூர்த்தி சொல்லுகிறார் என்றால் "நான் வேறு விதமாவப் பேசவேண்டுமென்று இருந்தேன். ஆனால் ஆவேசத்தால் என்னை மறந்து சில வார்த்தைகளை உபயோகித்துவிட்டேன்" என்று சொல்லுகிறார். அதோடு அவற்றில் அந்தரங்க காரியதரிசியோடு) "கலந்தாலோசித்தேன் என்று பேசியிருப்பதற்கு ஆக வருந்துகிறேன். ஏனென்றால் நான் அப்படி பேசினது கவர்னரின் அந்தரங்க காரிய தரிசியையும் பாதிப்பதாயிருக்கிறது" என்கிறார் கவர்னரின் அந்தரங்ககாரியதரிசி ஒரு வெள்ளைக்காரராயிருப்பதால் பயப்பட்டுக் கொண்டு அதற்கு மாத்திரம்வருந்துகிறேன் என்கிறார் இதன உண்மை என்ன ஸ்ரீசத்திய மூரத்திக்கு எவற்காக ஆவேசம் வரவேண்டும் படித்த மனிதர்களால் தெரிந்தெடுககப் பட்ட ஒருவர் இப்படி முட்டாள் தனமாய் நடந்துகொள்வானேன் ஆவேசம வந்தால் பொய்யும் போக்கிரித்தனமுமே பேசவேண்டும் என்கிற கட்டாயம் என்ன? இதிலிருந்தே தனதுமனதில் உள்ள குரோதம் துரோகம் இன்னது என்பது வெளிப்படையாகி விடுகிறதா இல்லையா? அது மாத்திரமல்ல அவரைத் தெரிந்தெடுத்த கூட்டத்தாராகிய பட்டதாரிகள் என்னும் பார்ப்பனர்களின் யோக்கியதையும் தெறிகிறதா இல்லையா? "வைதீகப் பார்ப்பனர்கள் புரோகிதப்பார்ப்பனர்கள் ஏதோ தங்களுடைய மூடக்கொள்கைகளாலும் பழய பழக்க வழக்கங்களாலும் வைதிக சாஸ்திரப் படிப்பினாலும பார்ப்பனரல்லாதாரிடம் அசூயையும் துவேஷமும் அடைகிறார்கள் ஆனால் ஆங்கிலம் படித்த பார்ப்பனர்கள் அப்படியில்லை பகுத்தறிவுள்ளவர்கள் அவர்களுக்குள் பார்ப்பனரல்லாத துவேஷம் குரோதம் இதுகள் கிடையாது" என்று சில பார்ப்பனர்கள் சொல்லுவதும் அவர்களிடம் கூலி வாங்கிப்பிழைக்கும் சில பார்ப்பனரல்லாத அன்னக்காவடிகள் தும் மேலொப்பம் இடுவதும் உண்மையாயிருக்குமானால் ஸ்ரீ சத்தியமூர்த்தியை தெரிந்தெடுத்திருப்பவர்களா? இதனாலேயே படித்த பட்டதாரிப் பார்ப்பனர்களே ஆங்கிலம்படிக்காத பார்ப்பனர்களை விட அதிகமாக பார்ப்பனரல்லாதாரிடத்தில், துவேஷமும் குரோதமும் கொண்டவர்கள் என்பது விளங்கவில்லையா? இதற்கு அப்படித்தவர்கள் யாராவது வெட்கப்படுகிறார்களா? ஒவ்வொருவரும் தனித் தனியாய் ஸ்ரீமான் மூர்த்திக்கு பணம் கொடுப்பதும் உற்சாகப் படுத்துவதுமாய் இருக்கிறார்களே ஒழிய எந்தப்பார்ப்பனராவது கண்டிக்கின்றார்களா? ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சர்வகலாசாலைத் திருத்த மசோதா கொண்டுவந்திருப்பதைப்பற்றியாவது எந்தப் பார்ப்பனராவது ஆக்ஷேபித்திருக்கிறார்களா? மகாத்மா காந்தி சொல்வதின் கருத்துப்போல் யோக்கியமான பார்ப்பனரே உலகத்தில்கிடையாது (ஸ்ரீ கோக்கலேயைத் தவிர) என்பதற்கு இதைவிட என்ன ஆதாரம் வேண்டும்.

பார்ப்பனர்கள் ஒழிந்தால் ஒழியநாட்டிற்கு விமோசனமில்லை என்று சொல்லுபவர்களின் வார்த்தையை ஊர்ஜிதப்படுத்த இம்மாதிரி படித்த வகுப்பாரின் யோக்கியதையே போராதா என்று கேழ்க்கிறோம. வெள்ளைக்காரர்கள் நமது நாட்டில் இருக்கவே விடுதலை பெற்றுவிடலாம் என்கிற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. ஆனால் பார்ப்பனீயம் உள்ள வரை நமது நாட்டுக்கு விடுதலை கிடைக்கும் எனகிற நமபிக்கை வர வர அடியோடு போய்க்கொண்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணமென்னவென்றால் அக்கூட்டத்திற்கு மானம்-வெட்கம் இல்லாததும் என்ன இழிவான காரியங்களைச் செய்தாகிலும் வயறு வளர்க்கவேண்டும், என்கிறகீழ்த்தன்மையே உருவாக வந்துவிட்டதாலும் இக்குணங்கள் உள்ளவர்கள் உள்ள நாடு விடுதலை அடைய முடியாது என்பதுதான். பார்ப்பனர்களுக்கு பிச்சைகொடுப்பதுபற்றியோ அவர்கள் பசிநீக்குவது பற்றியோ நமக்கு கவலையில்லை மிருகம், பக்ஷி, பூச்சி, புழு எதுவானாலும் பட்டினி கிடக்கப் பார்த்துக்கொண்டு ஒருவன் புசிப்பது ஆண்மையாகாது என்பது தான் நமதபிப்பிராயம். ஆனால், அவர்களை நமது பிரதிநிதிகள் நமது தர்மகர்த்தாக்கள் நமது ஆச்சாரியார்கள் நமது குருமார்கள் நமது மோக்ஷ வீட்டிற்கு அனுமதிச் சீட்டு கொடுப்போர் என்று எண்ணுவதுதான் முட்டாள்தனம் என்கிறோமே தவிர வேறில்லை. இனியாவது இப்படித்தபார்ப்பனக்கூட்டத்தார் நமக்கு பிரதிநிதிகள் என்று சொல்லுவதற்கு வெட்கப்பட்டு அப்புத்தியை விட்டு விடுவார்களா என்றுதான் கேழ்க்கிறோம்.

வெடிகுண்டுகள்

ஜஸ்டிஸ் கட்சி மந்திரிசபை அமைப்பதில் எங்களுக்குக்கவலை இல்லை. எந்த மந்திரி பதவியையும் எதிர்ப்போம் என்று பொது ஜனங்களுக்குக் கொடுத்தவாக்குத் தத்தத்தை தவர முடியாது. காங்கிரஸ் பெரிய ஸ்தாபனம் அதன் பெயர் கெட்டு விட நாங்கள் ஆதரவளியோம் என்று கனம் கவர்னர் பெருமானிடம் கூறிவிட்டு இப்பொழுது தான் வருகிறேன் 13-11-26ல்.

S. சீனிவாச ஐயங்கார்.

ஃ ஃ ஃ

மானபங்க குற்றம் சாட்டப்பட்ட ஒரு சித்திரக்காரரை "நீதிபதி" ஹே! சித்திரக்காரரே இப்படம் எழுத எவ்வளவு நேரம் பிடித்தது என்று வினவ" பத்தே நிமிடம் தான்? ஆனால் என் வாழ்நாள் முழுதும் இத்தகையபடம் எழுதவேண்டுமென்று சிந்தித்துவந்தேன் என்றுரைத்தார் பம்பாயில். நமது "நேருவும்" "ஐயங்காரும்" இம் மானபங்கமான "தேசிய திட்டத்தீர்மானத்தை" ஐந்தே நிமிஷத்தில் தயாரித்தோம் என்பதும் சித்திரக்காரரின் கதையை ஒத்திருக்கிறதல்லவா?

ஃ ஃ ஃ

பிராமணரல்லாதார் பிராமணத்தலைவர்களை நம்பக்கூடாதென்று சென்னையில் எச்சரிக்கை செய்கிறார்கள். இதை சீனிவாச ஐயங்காரும் கேட்டுக்கொண்டே தான் இருக்கிறார் அவர் தானே? இப்பொழுது (என்போன்ற) ஐரோப்பியத்தலைவர்களை நம்பக்கூடாது என்கிறார்.

ஃ ஃ ஃ

தனது மாயமான சலுகையை இந்தியர் ஒப்புக்கொண்டார்கள் என்பதற்கறிகுறியாய் லார்டு விட்டன் பிரபுவின் தூண்டுதலின்படி இரகசியமாய் நடந்து கொண்டிருக்கும் ஒரு நாடகத்தை மறைக்கும் பொருட்டுதான் ஐரோப்பியரின் தலைமைப்பதவி வெறுக்கப்படுகிறது.

ஃ ஃ ஃ

அபத்தமான உங்கள் வாதங்களை விட்டுவிட்டு (நாங்கள்) தயவு காட்ட வேண்டுமானால் (நீங்கள்) நல்ல பிள்ளைகளாக நடக்கவேண்டும் என்று கூறும் "பார்க்கன் ஹெட் பிரபுவுக்கு காரியக்கமிட்டி அடிமைப்பட்டு விட்டது.

ஃ ஃ ஃ

நாட்டைக் காட்டிக்கொடுக்கும் தேசத்துரோகிகளான (நேரு சீனிவாச ஐயங்கார் போன்ற பார்ப்பன தலைவர்களான) வேடதாரிகளின் திரைகளை கிழித்தெரிந்து ரகசியங்களை உலகமறிய வெளிப்படுத்துவதே "சுயமரியாதையுடைய பத்திரிக்கைகளின் கடமை.

ஹாரனிமன்.

ஃ ஃ ஃ

பல தலைவர்கள் என்னை திட்டுகிறார்கள் இவர்களுக்கு சீனிவாச ஐயங்கார் பணம் செலவழித்துக் கொண்டே இருந்தால் சந்தோஷம். என் பணத்தை இரைத்ததால்தான் இவர்களுக்கு ஸ்தானங்கள் கிடைத்தது இவர்களுடைய வஞ்சக வார்த்தைகளுக்கு ஏமாறுதீர்கள் தன்காரியத்திற்காக சுயநலத்திற்காக திட்டுபவர்களை நீங்கள் நம்பக்கூடாது..........

மகாத்மா காந்தியின் சாந்த குணமான தலைமை பதவி இல்லாததினால் தான் இத்தகைய சச்சரவுகள் ஏற்பட்டு விட்டது......... நானே இந்தியாவின் பூரண விடுதலையை விரும்புகின்றவன் ஆனால் பெரும் பாலானோர் அதை விரும்பவில்லை.................

ஹார்னிமன் சிறந்த தேசபக்தர் அவரையும் அவர் தேச பக்தியையும் பாராட்டுகிறேன். ஆனால் என்ன? அரிய வேலை செய்தவர்கள் எல்லாம் பின் மாறவில்லையா? ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் ஒரு காலத்தில் நல்ல சேவை தான் செய்தார் சிறைக்கும் நல்லெண்ணதுடன் தான் சென்றார் பிறகு அவர் மனம் மாறிவிட வில்லையா? அவர் இஷ்டப்படி நான் வரவில்லை என்று என் மீது குறை கூறிக் கொண்டு வேறு வழியில் திரும்பவில்லையா?

S. சீனிவாச ஐயங்கார்

ஃ ஃ ஃ

எவ்வளவு கட்டாயம் செய்தும் சாப்பிடவே மறுத்த ஒருவன் இரவு 12 மணிக்கு வெறும் கஞ்சியையும் சாதத்தையும் உண்டானும். அதைப்போல் சட்டசபை பகிஷ்காரம் அச்சபையை எட்டி பார்க்கவும் மாட்டோம் பார்த்தாலும் உத்தியோகம் வகிக்கவு மாட்டேம். வகித்தாலும் சர்காருடன் ஒத்து வாழ மாட்டோமென்ற காங்கிரஸ் வீரர்கள் கஞ்சி குடித்த கதைக்கு வந்து விடவில்லையா?

மஞ்சேரி ராமையர்

ஃ ஃ ஃ

பம்பாய் நிர்வாக கமிட்டி கூட்டத்தில் சென்னை ஜஸ்டிஸ் கக்ஷியார் கவர்னருடன் கலந்து கொண்டு சட்டசபையைக்கலைப்பதைப் பற்றி செய்யப்படும். முயற்சியின் ரகசியத்தை அறிந்து உடனே வெளியிட வேண்டுமென்று திரு. ஐயங்காருக்கும் திரு. பிரகாசத்திற்கும் அனுமதியளிக்கப் பட்டதே? அவ்வண்மையை விசாரித்து வெளியிட என்? இருவம் தாமதிக்கவேண்டும்

ஃ ஃ ஃ

"அ. இ, கா, க. அரசியல் திட்டம் தயார் செய்ததை சிலர் ஆச்சர்ய படுகிறார் களாம்? அது தெரியாத்தனம். இத்தகைய திட்டம் தயாரிக்கப் படவேண்டுவது அவசியமென்றுநான் முன்பே கூறி இருக்கிறேன் இத்திட்டம் வகுக்கப்பெற்றால் அதைராயல் கமிஷன் முன் வைக்கலாம்" என்று பண்டித நேரு சொல்லியே பிரேரணையை கொண்டு வந்தார்.

ஜோசப்.

ஃ ஃ ஃ

ஜில்லா போர்டுகளை எல்லாம் உடனே எடுத்து விடவேண்டுமென்று மந்திரியிடம் சத்தியமூர்த்தி உறுதி வாங்கினார்......... சர்.வி.பி.ராமசாமி ஐயரின் குலாம்களாக மந்திரி சபையும் காங்கிரஸ் கக்ஷியும் இருக்கிறது. நேரு. சீனிவாச ஐயங்கார் இவர்கள் அனுமதி மேல் தான் சென்னை சட்டசபையில் சுயராஜ்யக் கக்ஷியார் மந்திரியின் சம்பள பிரேரணையின் பொழுது வெளிவந்தார்கள்

பிரகாசம்.

ராஜாசாஹேபும்—நாயுடுகாரும்.

கரசிய சம்பாஷணையைப் பற்றி அக்கறை இல்லை

முடிவில் சுயமரியாதையான ராஜியேர்ப்படல் வேண்டும்.

1, 2 தேதிகளில் தேசிய பிரபல தலைவர்களான பனகால் அரசரும் டாக்டர் நாயுடுகாரும் பார்ப்பனரல்லாதார் ஒற்றுமையைப்பற்றி பேசப்போகின்றார்கள் என்றும் அது ரகசியமாகவே இருக்குமென்றும் வந்த செய்தியை பற்றி அநேகர் சந்தேகமுறலாம். இரு பெருந்தலைவர்களும் பார்ப்பனர்களின் மானம் கெட்ட தன்மையும் அயோக்கியத் தனமும் அளவுக்கு மீறி போய்விட்ட இத்தச்சமயத்தில் என்று கூடுகிறார். ஒன்று கோடிக்கணக்கான பார்ப்பனரல்லாதாரின் எதிர்கால போக்கானது இவர்களின் சம்பாஷணை முடிவை எதிர்பார்த்திருக்கிறது. பொருப்பும், கண்ணியமும், ஏற்றுக்கொண்ட இக்கனவான்கள் முடிவான அறிக்கை வெளியிட அதிக காலம் செல்லாது. வன்மம் கொண்ட சட்டமெம்பர் ஸி. பி. ராமசாமி ஐயரும் காங்கிரஸ் தலைவர்கள் ஐயங்கார்களும் தோட்டி பார்ப்பானிலிருந்து தெண்டமான் பார்ப்பான் வரையில் இன்று ஒரே கட்டுப் பாடாக இருந்து வலிமை கொண்ட நம் சமூகத்தைப பலவீனத்தும் வஞ்சிப்பதுடன் நில்லாது நம்மை, அவமானமாகவும் நடத்துகிறார்களே! இதற்கு இவர்கள் பதில் என்ன? என்று நமது மக்கள் எதிர்பார்த்து கவலையுறுவதை ராஜா சாகேபும் நாயுடுகாரும் உணர்வார்களேயானால் கோயம்முத்தூர் மகாநாடு சிறப்புடையதாகவும் பிரயோஜனப்படத் தக்கதாகவும் இருக்குமென்பதில் ஆக்ஷேபணை இல்லை. ஜனத்தலைவர்கள் ஜனங்களுக்காவே தலைவர்கள. தலைவர்களுக்காக ஜனங்கள் வேண்டுமென்ற காங்கிரஸ் சுயராஜ்ய கக்ஷி இன்று ஊர்சிறித்து உமிழப் படுகிறதல்லவா?

கோவை நண்பன்

பார்ப்பனீய மற்ற தமிழ்த்திருமணம்

பெருந்தோட்டத்தில்:—பார்பனரல்லாத பிரபவத் தலைவனான திரு. ஆருமுகம் பிள்ளையவர்களின் நெருங்கிய பந்துவான திரு. அகோரம் பிள்ளைக்கும், சௌ, விருத்தம்மாளுக்கும், பெருந்தோட்டத்தில் மணம் இனிது நடந்தேரியது.

பட்டுக் கோட்டை:— S. வேணுகோபல நாயுடு B. A. B. L. அவர்களின்புத்திரியான சௌ. ராஜலெக்ஷ்மி அம்மாளுக்கும்திரு. ராஜகோபல்நாயுடுக்கும் ஜெயலெக்ஷ்மி அம்மாளுக்கும்ராஜகோபால் ராஜாவுக்கும்22உ முகூர்த்தத்திலேயே இனிதுநடந்தேரியது.

(கான்பூரில்) உத்தியோகம் ஏற்கக்கூடாதென்று காங்கிரஸ் தீர்மானித திருக்கிறது. மந்திரி கக்ஷியை தாமதிர்க்க வேண்டும் மந்திரிசபை அமைக்காவிட்டாலும், "பினாமி" மத்திரி சபையை அமைக்கலாம் என்பதற்கும் இடமிருக்கிறது. இத்தகைய ஆனாலும் மோசடியை நாம் காங்கிரஸில் கையாளக் கூடாது. A. ரங்கசாமி ஐயங்கார்.

பைத்தியக்காரனுக்கும் உஷார்க்காரனுக்கும் சம்பாஷணை.

(சித்திர புத்திரன் எழுதுகிறான்.)

பைத்தியக்காரன்:— ஸ்ரீமான்கள் பிரகாசமும் சாம்பமூர்த்தியும் இப்போது ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார் சத்தியமூர்த்தி முதலியவர்களுடன் சண்டை போட்டுக்கொண்டு ஒருவருக்கொருவர் பார்ப்பனக் குட்டுகளை வெளியாக்கி வருகிறார்களே இந்த சமயத்தில் நாம் காங்கிரசைப் பிடித்துக்கொள்ளலாமே?

உஷார்க்காரன்:— அடபோடா பயித்தியக்காரப்பயலே பார்ப்பனர்கள் சங்கதி உனக்குத் தெரியாதா? சுயராஜ்ய பத்திரிகைக்கு ஏதாவது கொஞ்சம் பணம் வேண்டியிருக்கும் இல்லாவிட்டால் ஆந்திர தேசத்தில் சுயராஜ்யக்கட்சியையும் சீனிவாசய்யங்கார் கோஷ்டியையும் திட்டினால்தான் மதிப்புக்கிடைக்கிறதாகவிருக்கும் அதற்காக ஸ்ரீமான்கள் பிரகாசமும் சாம்பமூர்த்தியும் போட்ட புது வேஷமேயல்லாமல் இதில் நமக்கொன்றும் லாபமில்லை. மேற்படி இரண்டு யோக்கியர்களும் சட்டசபை தேர்தலின் போது செய்த உபத்திரவம் உனக்குத் தெரியாதா? இவர்கள் ஜஸ்டிஸ் கக்ஷியை வைதது உனக்குத் தெரியாதா? இதே ஸ்ரீமான் சாம்பமூர்த்தி முழங்காலுக்குமேல் வேஷ்டியைக்கட்டிக்கொண்டு காந்தியைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு பார்ப்பனரல்லாதாரை திட்டவில்லையா? பார்ப்பனரல்லாதார் எதிர்க்கிற சண்டை வரும்போது திடீரென்று எல்லாப்பார்ப்பனரும ஸ்ரீமான்கள் பிரகாசம் சாம்பமூர்த்தி உள்பட நிமிஷ நேரத்தில் ஒன்று சேர்ந்து விடுவார்கள் அவர்களை நம்பிவிடாதே.

பைத்தியக்காரன்:— அப்படியானால் பார்ப்பனரல்லாதார் எல்லோரும் ஏன் ஒன்று சேருவதில்லை?

உஷார்க்காரன்:— அதற்குக் காரணம் அநேகமுண்டு. என்னவென்றால் பார்ப்பானுக்கு வயிற்றுச்சோற்றுப் பஞ்சமே இல்லை எப்படியாவது கஷ்டப்படாமல் பிழைக்கலாம்.

பைத்தியக்காரன்:— அதென்ன பார்ப்பனனுக்கு மாத்திரம் சோத்துக்கு கஷ்டமில்லை என்கிறாய்.

உஷார்க்காரன்:— அப்படிக்கேள். சந்தேகத்தைக் கேட்டுத்தெரிந்து கொள்ளாமல் சிலபேர் மகாமேதாவிகள் போல் நினைத்துக்கொண்டு "பார்ப்பனர் புத்திசாலி அவர்களுக்குள் சண்டை இல்லை, பார்ப்பனரல்லாதார் முட்டாள்கள் அதனால்தான் சண்டை பிடித்துக்கொள்ளுகிறார்கள் என்று" சொல்லிவிடுவதுண்டு அது என்ன காரணம் என்றால் அது நமது அடிமை மனப்பான்மையே தவிர வேறில்லை. யோசித்துப் பார்த்தால் நாம் அவர்களைவிட புத்திசாலி என்பது நன்றாய் விளங்கும் பார்ப்பானுக்கு ஏன் சாப்பாட்டிற்கு பஞ்சமில்லையென்றால்:

முதலாவது பார்ப்பான் உயர்ந்த ஜாதி என்பதாலும் மற்றவர்கள் தாழ்ந்தஜாதி என்பதாலும் பார்ப்பனரல்லாதார் ஒவ்வொருவரும் தாங்கள் உண்மையாய் எந்த தகப்பனுக்குப் பிறந்தார்களோ அதை விட்டு விட்டு "நான் வைசியனுக்குப் பிறந்தேன் நான் க்ஷத்திரியனுக்குப் பிறந்தேன் நான் பூவைசியனுக்குப் பிறந்தேன நான் அக்கினி குல க்ஷத்திரியனுக்குப் பிறந்தேன் நான் யாதவக்ஷத்திரியனுக்குப்பிறந்தேன் நான் விஸ்வப்பிராமணனுக்குப் பிறந்தேன் நான் சௌராஷ்டிரப்பிராமணனுக்குப் பிறந்தேன் என்று இந்த நாட்டில் இல்லாத ஒரு ஜாதி தகப்பன் பேரைச்சொல்லிக் கொண்டும் எல்லோரும் சகோதரர் என்பதை மறந்தும் ஒருவனுக்கு ஒருவன் உயர்ந்த ஜாதி என்றும் ஒருவனை ஒருவன் மற்றவனைவிட தாழ்ந்த ஜாதி என்றும் சொல்லிக்கொண்டு பார்ப்பனனைப்பார்த்துக் காப்பியடித்து ஒருவன் வீட்டில் ஒருவன் சாப்பிடுவதில்லை ஒருவன் தொட்டதை ஒருவன் சாப்பிடுவதில்லை ஒருவனை பார்த்த ஒருவன் சாப்பிடுவதில்லை என்று முட்டாள்தனமாக சொல்லிக்கொள்வதாலும் இவர்கள் எல்லோரும் பார்ப்பனனைவிட தாழ்ந்தவர்கள் என்பதை ஒப்புக்கொண்டு அவனை உயர்வாகக் கருதிக்கொண்டிருப்பதாலும், பார்ப்பனரல்லாதார் எல்லோரும் பார்ப்பனர்கள் தொட்டதை பார்ப்பனர் வீட்டில் பார்ப்பனர் முன்னால் சாப்பிடுவது குற்றமற்றதென்றும் விசேஷமென்றும் நினைத்துக்கொண்டிருப்பதாலும் பார்ப்பனர் ஓட்டல், பலகாரக்கடை காப்பிக்கடை முதலியதுகள் வைத்துக் கொள்ளுவதற்கு சவுகரியமாயும் கோவிலில் பூஜை செய்ய சௌகரியமாயும் சமயல் வேலையில் சேர்ந்துகொள்ள சவுகரியமாயும் ஆகிய இந்த வேலைகளை உலகத்தில் உள்ள [illegible] பார்ப்பனருக்கு தாராளமாய் கிடைக்கிறது. இதனாலேயே ஒரு சமயல் பார்ப்பானுக்கு மாதம் 30 முதல் 50 ரூபாய் வரை சம்பளம் கிடைக்கிறது. ஒருகாப்பிக்கடைக்காரன மாதம் 1-க்கு 100, 150 ரூ. வாடகை கொடுத்து 50, 60 ரூபாய்க்கு சாராயம் குடித்து மாம்சம் சாப்பிட்டு மாதம் 75 முதல் தேவடியாளுக்கும் கொடுத்து தான் குடும்பத்திற்கு மீ 100 ரூ. சிலவும் செய்யத்தக்க வரும்படி சம்பாதிக்கிறான். பக்கத்துக்கடைக்காரன் பார்ப்பனரல்லாதானயிருந்தால் அதேவியாபாரம் செய்வதில் மீ 15 ரூபாய் வாடகை கொடுக்கமாட்டாமலும் தன் வீட்டு ஜனங்கள் வயிறு நிறைய சாதாரண சாப்பாடுகூட சாப்பிட முடியாமலும் பட்டினி கிடக்கிறார்கள். இரண்டாவது பார்ப்பார் உயர்ந்த ஜாதி கடவுள் முகத்தில் பிறந்தவன் என்கிற நமது அறியாமையால் நமது பாவங்களைப் போக்கவும புண்ணியம சம்பாதிக்கவும் நமது பெற்றோர்களுக்கும் பண்ணை குடிகளுக்கும் நன்மையை உண்டாக்கவும் நாம் அவனுக்கு பணம் கொடுத்து அவன் காலில் விழுந்து அவன் காலை கழுவி தண்ணீர்குடித்து மோக்ஷத்திற்கு போக எண்ணுவதாலும் அவர்களுக்கு தினப்படி தாராளமாய் சம்பாதனை ஏற்பட்டுவிடுகிறது, இதன் மூலம் ஒவ்வொரு புரோகிதனும் பண்டாரங்களும், பஞ்சாங்கக்காரனும தாங்கள் வயிறு நிறைய சாப்பிட சம்பாதிப்பதுடன் தங்கள் பிள்ளை குட்டிகளையும் B. A., M. A., படிக்க வைத்து ஐகோர்ட்ஜட்ஜி சட்டமெம்பர் அட்வொகேட் ஜனரல் முதல் உத்தியோகம் பெற்று வாழவும் லக்ஷக்கணக்காய் சம்பாதிக்கவும் காசி இராமேஸ்வரம் கன்னியாகுமரி வரையில் பார்க்கிறோம்.

தவிர, காங்கிரசின் பலனாய் சர்க்கார் உத்தியோகங்களில் பார்ப்பனர்கள் ஏராளமாய் அமைய ஏற்பட்டுவிட்டதாலும் அவர்களே கோர்ட்டுமாஸ்தா ஜட்ஜிகள் வரையில் ஏற்பட்டுவிட்டதால் அவர்கள் கோர்ட்டுக்கு பார்ப்பன வக்கீல்களும் பார்பனர் வக்கீல் குமாஸ்தாக்களும் என்கிற வகையில் ஒருமாசம் பார்ப்பனர்களுக்கு பிழைப்பு ஏற்பட்டுவிடுகிறது.

இது தவிர பிச்சை எடுப்பது தங்கள் குலத்தின் மேலான தர்மம் என்பதாக ஏற்படுத்திக்கொண்டிருந்தாலும் நம்மிடவர்களில் கடைந்தெடுத்த முட்டாள்கள் அவர்களுக்கு பிச்சை கொடுப்பது தங்களுக்கு மோக்ஷத்தைத் திறக்கக்கூடிய சாவி என்று நினைப்பதாலும் இவ்வளவு வழியிலும் பிழைக்க முடியாத பார்ப்பான்களுக்குக்கோவென்றால் கெட்டுப்போன நம்முடைய முன்னோர்களும் நம் பழய ராஜாக்களும் செத்துப் போகும் நம்மிட பெரியவர்களும இப்போதிருக்கும் சில இல்லேட் ராஜாக்களும் 100க்கு 5 வட்டிசம்பாதித்த பாவத்தைத் தொலைப்பதற்கு பார்ப்பானுக்குச் சோறுபோட்டால் போதும் என்று நினைக்கிற லேவாதேவி செட்டிப்பிள்ளைகளும் பார்ப்பன ஆண்-பெண் பெண்டில்லாதவன் புருஷனுடன் வாழாதவள் புருஷனிழந்தவள் குழந்தை குட்டி சகலத்துடன் தினமும் சாப்பிட சத்திரங்களும் காமவிகாரத்தால் தப்புகுழந்தைகள் உண்டாகிவிட்டால் பிரசவிப்பதற்கு பிரசவ ஆஸ்பத்திரிகளும் பிரசவித்த அக்குழந்தையை எடுத்து வளர்த்து தங்கள் ஜனசங்கையை அதிகப்படுத்திக்கொள்ள கிருஸ்த்து பாதிரிமாரும் போர்டிங்குகளும் தாராளமாய் இருக்கிறது ஆகவே அவர்களுக்கு எந்தவழியில் வயிற்றுப் பிழைப்புக்கு கஷ்டம் இருக்கிறது என்பதைச் சொல்லுபார்ப்போம்.

தவிரப் பார்ப்பான் பிழைப்பு என்றும் கெடவில்லை அன்றும் கெடவில்லை இன்றும் கெடவில்லை நமது முட்டாள் தனத்தால் பிழைப்பவனானதால் நம்மிடம் எதுவரை முட்டாள்தனம் இருக்கிறதோ அது வரை அவன் பிழைப்புக்கு ஆக்ஷேபணையில்லை நம்மவர் பிழைப்போ அப்படியில்லை

பயித்தியகாரன்:—அதென்ன அப்படிச்சொல்லுகிறாய்.

உஷார்க்காரன்:—என்னவென்றால் நம்மவர்கள் முன்காலத்தில் எப்படிப்பிழைத்தார்கள் தெரியுமா எல்லோருக்கும விவசாயமும் கைத்தொழிலும்தான் விவசாயத்தைப் பற்றிசொல்ல வேண்டியதில்லை வரிகட்டுவதே கஷ்டமாய் விட்டது. பூமி எல்லாம் பார்பனனிடமும்பார்பனர்கள் காலில்விழுந்து அவர்களுக்கு அழுகும் சில பணக்காரனிடமுமே சேர்ந்து விட்டது. போதாக்குறைக்கு பருவமழையுமில்லை கைத் தொழிலைப்பற்றி நினைக்கவே வேண்டியதில்லை. இந்தப்பார்ப்பனர்கள் அரசாங்கத்திற்கு உள் உளவாய் இருந்து வருவதின் மூலம் வெளி அரசாங்கத்தார் நமது தொழில்களையே பாழ்பண்ணி



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஸு வைகாசி 23உ

"வரதராஜுலு அறிக்கை"க்கு ராமசாமியின் அபிப்பிராயம்

"தமிழ்நாடு" பத்திரிகையின் ஜூன்-மீ 3-தேதி தலையங்கமாகிய "வரதராஜுலு அறிக்கை" என்னும் விஷயத்திற்கு நான் ஏதாவது சமாதானம் சொல்லவேண்டும் என்பதாக நமது வாசகர்கள் எதிர் பார்க்கக்கூடுமென்பதாக நினைத்தே அதே, தலையங்கமிட்டு இவ்வியாசத்தைத் துடங்குகிறேன். ஸ்ரீ வரதராஜுலு அறிக்கையின் முதல் வாக்கிய ஆரம்பத்தில் "காங்கிரஸ் மகாசபையே தேசத்தில் பிரதானமானது" என்பதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது எந்த விஷயத்தில்யாருக்குப்பிரதானமானது? எந்த தேசத்திற்குப்பிரதானமானது? தேசத்தில் உள்ள 33 கோடிமக்களில் எந்த வகுப்பாருக்கு எந்த கூட்டத்தாருக்குப்பிரதானமானது? தென்னாட்டில் படித்த வகுப்பாரான பார்ப்பனருக்கும், வட நாட்டில் படித்த கூட்டத்தாரான சிலருக்கும் உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பதற்கும், அவர்களை வாழவைக்கவும் பிரதானமானதே அல்லாமல் வேறுயாருக்கு? எதற்கு? அதனால் என்ன பிரயோஜன முண்டென்றும் கேட்கிறேன்? காங்கிரஸ் ஏற்பட்டு 40 வருஷத்திற்கு மேலாகியும் தேசமக்களின் பெரும்பாலோரான விவசாயி, தொழிலாளி, குடியானவன் ஆகிய கூட்டத்தாருக்கு என்ன நன்மை செய்திருக்கிறது? காங்கிரசுக்கு முன் விவசாயிகளுக்கு ஏற்பட்ட வரி எவ்வளவு? காங்கிரசுக்கு முன் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருந்த கடன் எவ்வளவு? காங்கிரசுக்குப்பின் விவசாயிகளுக்கு ஏற்பட்ட வரி எவ்வளவு? கடன் எவ்வளவு? காங்கிரசுக்கு முன் தொழிலாளிகளின் நிலைமை சம்பாத்தியம் முதலியதுகள் சவுகரியம எப்படியிருந்தது? காங்கிரசுக்குப்பின் தொழிலாளிகளின் நிலைமை தொழில் சம்பாத்தியம் சவுகரியம் எப்படி ஆய் விட்டது? என்று கேட்கிறேன். இனி வகுப்புகள் வாரியாய் கவனிப்போம். காங்கிரசுக்கு முன் பார்ப்பனரல்லாதார் நிலைமை செல்வம் செல்வாக்கு, எப்படி இருந்தது? காங்கிரசுக்குப்பின் அவர்களது நிலைமை, எப்படி, இருக்கிறது? காங்கிரசுக்கு முன் பார்ப்பனர்கள் நிலைமை எப்படி இருந்தது? பின் அவர்கள் நிலைமை எப்படி இருக்கிறது? ஜஸ்டிஸ் கட்சியும், முஸ்லீம் லீக்கும் ஏற்படாமல், காங்கிரசை நம்பி இருந்தால் "பஞ்சமர்கள்" மகமதியர்கள் முதலிய ச[illegible]ர்கள் நிலைமை என்னவாயிருக்கும்? இவைகளை எல்லாம் தனது மனதில் கையை வைத்து யோசித்து பார்க்கும்படி ஸ்ரீமான் வரதராஜுலு அவர்களை வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். அன்றியும் "சகல ஜாதியாருக்கும் பொதுவான காங்கிரஸ் சென்னையில் உள்ள இரண்டொரு பார்ப்பனர்களிடம் அகப்பட்டு விட்டதால் பார்ப்பனக் காங்கிரசு என்று பெயரெடுத்து விட்டது". என்று "தமிழ் நாடு" எழுதியிருக்கிறது எந்த விதத்தில் அது சகல ஜாதியாருக்கும் பொதுவானதாகும் என்று கேட்கிறேன்.

கிருஸ்தவரில் எத்தனை பேர் காங்கிரசில் இருக்கிறார்கள்? மகமதியரில் எத்தனை பேர் காங்கிரசிலிருக்கிறார்கள்? பஞ்சமரில் எத்தனை பேர் காங்கிரசிலிருக்கிறார்கள்? இன்னமும் இந்துகள் என்? பேர்களில் எத்தனை பேர் காங்கிரசிலிருக்கிறார்கள்? இந்தக் கூட்டங்களில் பெரும்பான்மையோர் காங்கிரசிலிருக்கிறார்களா? விலகி இருக்கிறார்களா? எந்தக் காலத்திலாவது பார்ப்பனரல்லாத மற்றவர்களிடத்தில் காங்கிரசு இருந்து வந்ததா? எந்தக்காலத்திலாவது அது பார்ப்பனக் காங்கிரசல்லாததாயிருந்ததா?

தவிர, "ஐயங்கார் கோஷ்டியாரிடமிருந்து காங்கிரசை மீட்கவேண்டும் என்கிற உணர்ச்சி பரவிவிட்டது" என்கிறது ஐயங்கார் பாதார விந்தங்களில் மறுபடியும் மறுபடியும் காங்கிரசையும் தலைமைப் பதவியையும் காணிக்கையாய் வைத்து போட்டி போட்டு தண்டம் சமர்ப்பித்தது யார்? பார்ப்பனரா பார்ப்பனரல்லாதாரா? அம்மாதிரி ஆசாமிகள் இப்போது ஒழிந்து போய் விட்டார்களா? இனி அம்மாதிரி ஆசாமிகளை சிருஷ்டிக்க ஐயங்கார் சுவாமிகளால் முடியாதா? என்று கேட்கிறேன். தவிர, "ராஜீய அபிவிர்த்தி இந்தியாவுக்கு ஏற்படும்போது அது ஒரு ஜாதியாருக்குச் சென்று தனியாக இருக்க முடியாது"? ஆதலால் எல்லா ஜாதியாரும் காங்கிரசில் சேரவேண்டும் என்று "தமிழ் நாடு" குறிப்பிடுகிறது. ராஜீய அபிவிர்த்தி என்பது என்ன என்று கேட்கிறோம்? 1000, 2000, 5000, 10000 சம்பளமுள்ள உத்தியோகங்களும் பதவிகளும் அல்லாமல் வேறு ஏதாவது உண்டா? அந்த உரிமையையும் நமது நாட்டில் பார்ப்பனர்களான ஒரே ஜாதியார் ஏக போகமாய் அநுபவிக்காமல் வேறு எல்லா ஜாதியாரும் கிரமமாய் அநுபவிக்கிறார்களா? என்று கேட்கிறேன் தவிர, "பார்ப்பனரல்லாதார் நசுக்கப்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கு இருக்குமானால், அதற்கு காங்கிரசை விட வேறு பலமுள்ள ஸ்தாபனம் கிடையாது". என்று "தமிழ் நாடு" எழுதுகிறது. இதுவரை அதாவது இந்த 10 வருஷ காலமாக பார்ப்பனரல்லாதாரின் நிலைமையும் உரிமையும் ஜஸ்டிஸ் கக்ஷியினால் உயர்த்தப்பட்டதா அல்லது காங்கிரசினாலா? மகமதிய ஹைக்கோர்ட்டு ஜட்ஜி நிர்வாக சபை மெம்பர், வைசிராய் சபை மெம்பர் மைசூர் திவான், கிருஸ்தவ ஹைக்கோர்ட் ஜட்ஜி, மந்திரி சட்டசபை பிரசிடெண்டு, திருவாங்கூர் திவான் பார்ப்பனரல்லாத ஹைக்கோர்ட்டு ஜட்ஜி, மந்திரி, பஞ்சம ஹைகோர்ட் ஜட்ஜி சட்டசபை மெம்பர் இந்தியா கவுன்சில் மெம்பர் இன்னும் இது போன்ற எத்தனையோ "அரசியல உரிமைகள்" காங்கிரசினால் இவர்களுக்கு கிடைத்ததா? காங்கிரசில் சேராமல் வெளியில் இருந்ததினாலும் ஜஸ்டிஸ் கக்ஷியாலும் இவர்களுக்கு கிடைத்ததா? என்று. கேட்கிறேன். இது போன்ற இன்னும் பல விஷயங்கள் எழுதியிருக்கிறதுகளுக்கும் இதுபோலவே பதில் சொல்லலாம் "தமிழ் நாடு" காங்கிரசில் சேரும்படி எழுதியவற்றில் பார்ப்பனரல்லாதார் நன்மையைப் பொருத்தவரை ஒன்றாவது சரியான காரணம் அல்ல என்பது நமது பொது அபிப்பிராயம். இன்னமும் சொல்லப்போனால், இந்தியாவுக்கு விடுதலை வாங்கித்தர வேண்டும் என்று நினைப்பதற்கு தென்னாட்டுப் பார்ப்பனரல்லாதாராகிய நாம் ஒரு விதத்திலும் யோக்கியதை உடையவர்கள் அல்ல. நமது யோக்கியதையையே சரிப்படுத்திக்கொள்ள நமக்கு யோக்கியதை இல்லை. நாம் தாழ்ந்த ஜாதியார் என்று நமது நாட்டில் வேதப்படி, சாஸ்திரப்படி, சட்டப்படி, வழக்கப்படி மதிக்கப்படுகிறோமா இல்லையா என்பதை ஸ்ரீமான் நாயுடுவை முதலாவதாக யோசித்துப் பார்க்கும்படி விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன். அதற்கு ஸ்ரீ நாயுடு என்ன செய்யப்போகிறார் என்று வினயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். 40 வருஷத்திய காங்கிரசினால் "சகல ஜாதிக்கும் பொதுவான காங்கிரசினால்" மற்றும் என்ன என்னவோ "பெருமை" கொண்ட காங்கிரசினால் நமக்குள்ள இக்குறைவுகளை நீக்க ஏதாவது முடிந்ததா? அதனால் கிடைத்து வந்த பலன் அல்லது "ராஜீய உரிமைகளா"லாவது முடிந்ததா? என்று கேட்கிறேன். "பார்ப்பனரல்லாதாருக்கு தேசாபிமானமும் உண்டு, ராஜீய ஞானமுண்டு என்று மற்றவர் அறியவேண்டுமானால அவர்கள் காங்கிரசில் சேரவேண்டியது அவசியமாகும்" என்று கூட அப்பத்திரிக்கை எழுதி இருக்கிறது: என்னைப் பொருத்தவரை தேசாபிமானமும் ராஜீய ஞானமும் எனக்கு உண்டு என்பதை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டியது அனுவசியம். என்னுடைய சொந்த சுயமரியாதைக்கும் சுதந்திரத்திற்கும் தேசாபிமானத்தையும் ராஜீய ஞானத்தையும் கூட விற்கத்தயாராயிருக்கிறேன். என்னுடைய சுயமரியாதையையும் உரிமையையும் ஒப்புக்கொள்ளாத ஒரு ஸ்தாபனம அது காங்கிரசாயிருந்தாலும் சரி அது தேசாபிமானமாயிருந்தாலும் சரி மோக்ஷலோகமாயிருந்தாலும் சரி அதில் இருக்க நேரும் ஒவ்வொரு விநாடியையும் நரகத்திலிருப்பதாகத் தான் எண்ணுவேன். நமது உரிமையை ஏற்றுக்கொள்ளும்படி ஒரு சங்கத்தைப் போய் கெஞ்சுவது நமது சுயமரியாதைக்கு அழகல்ல வென்பதே எனது அபிப்பிராயம். வெள்ளைக்காரனை சுயராஜ்யம் கேட்பதும் காங்கிரசை நமது உரிமை ஒப்புக்கொள்ள நாம் கெஞ்சுவதும் நமக்கு சுயமரியாதை இல்லை என்பதற்கு சரியான உதாரணங்களாகும், காங்கிரசை எவனொருவன் அது நம்மைப் போன்ற ஒரு பத்து பேர் சேர்ந்த கூட்டம் என்று நினைக்கிறானோ எவனொருவன் காங்கி

ரஸ் அபிப்பிராயத்தை நம்மைப் போன்ற ஒரு பத்து மனிதனின் அபிப்பிராயமென்று நினைக்கிறேனே அவனே சுதந்திர புத்தி உள்ளவனாவான் அதைவிட்டு கண்மூடித்தனமாய் பின்பற்றுபவன் உரிமைக்கும் சுதந்திரத்திற்கும் யோக்கியதை அற்றவனே ஆவான் என்பது எனது தாத்பிரியமான முடிவு.

அதே பத்திரிகை காங்கிரசில் ஜஸ்ட்டிஸ கொடியை நாட்ட வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள் ... ... அதில் தனிப்பட்டவர்கள் வகுப்பு வாதத்தை புகுத்துவது நியாயமல்ல என்றும் எழுதி இருக்கிறது. அப்படி ஆனால் கீழ் வகுப்பார் தாழ்த்தப்பட்ட வகுப்பார் முதலியவர்களின் கதி என்ன ஆவது என்று கேட்க்கிறேன். காங்கிரசில் எல்லாருக்காகவுமே உத்தியோகம் வருகிறது என்று வைத்துக்கொண்டால் "எங்கள் வகுப்புக்கு ஒன்று கொடுங்கள்" என்று கேட்க்கக்கூடாது என்று காங்கிரசு சொல்லுமானால் அல்லது நாயுடுகார் சொல்வதானால் மற்றபடி காங்கிரசினால் லாபம் தான் என்ன? என்று கேட்க்கிறேன்? காங்கிரசில் கேட்ப்பது உத்தியோகம் அதிகாரம் பதவி சம்பளம் இவற்றைத்தவிர வேறில்லை யாவரும் அறிந்தவிஷயம் அக்காங்கிரசில் உள்ளவர்களோ அநேக வகுப்பார்களாயிருக்கிறார்கள் என்பதும் தெரிந்தவிஷயம் எல்லா வகுப்பார்களுக்கும் அது கிடைக்கவேண்டுமென்பதோ காங்கிரசுக்குள் வகுப்புவாதத்தை புகுத்துவதாகிவிடுகிறது. அப்படியானால் அதன் இரகசியம் என்ன என்பதை வாசகர்கள் யோசிக்க வேண்டுகிறேன். தவிர காங்கிரசின் சட்டமருப்பை யாவது சத்தியாக்கிரகத்தையாவது கண்டு "ஜஸ்டிஸ்" கட்சியாரோ அல்லது எந்த பார்ப்பனரல்லாதாரோ பயப்படவேண்டியதில்லை என்று தமிழ் நாடு பத்திரிகை எழுதியிருக்கிறது. இவ்விஷயத்தில் இப்போது "காங்கிரஸ்" தலைவர்களாகிய ஸ்ரீமான்கள் ஸ்ரீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார், சாமி வெங்கிடாசலம், வெங்கிட்டரமணய்யங்கார், ஒ. கந்தசாமி செட்டியார் எம். கே. ஆச்சாரியார், ஆதிநாராயண செட்டியார் முதலியவர்களைவிட எவ்விதத்திலும் இளைத்த ஆசாமிகள்? "ஜஸ்டிஸ்" கட்சி பார்ப்பனரல்லாதார் கூட்டத்திலேயே இல்லை என்று உறுதியாய்ச் சொல்லுவேன்.

ஆகவே 'ஜஸ்டிஸ்' கட்சியின் நன்மையை உத்தேசித்தும், பார்ப்பனரல்லாதாரின் நன்மையை உத்தேசித்தும், அக்கட்சி காங்கிரசில் சேருவது என்பது புத்திசாலித்தனமான யோசனை அல்ல வென்பதோடு ஜஸ்டிஸ் கட்சிக்கு சாவு மணி என்று கூட சொல்ல வேண்டியிருக்கிறதே என்று வருத்தப்படுகிறேன். ஜஸ்டிஸ் கட்சிக்கு இது சமயம் நாட்டில் கொஞ்சம் மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. முக்கிய காரணம் என்னவென்றால் காங்கிரசின் யோக்கியதை அதன் கசுமாலம் முதலியன வெளியாக்கப்பட்டதினால் தான்.

கூடிய சீக்கிரத்தில் காங்கிரஸ் பார்ப்பனர்களே பார்ப்பனரல்லாதாரை காங்கிரசில் வந்து சேரும்படி கெஞ்சப்போகிறார்கள் என்பது நமக்குத்தெரியும். அதாவது பார்ப்பனரல்லாதார்கள் கட்டுப்பாடாகவும் ஒற்றுமையாகவும் இருந்து ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பித்த காலத்தில் பார்ப்பனர்கள் பயந்துகொண்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கும் சம்மதித்து தங்கள் சொந்தப்பணமும் செலவு செய்து கூட காங்கரஸ் பார்ப்பனரல்லாதார் சங்கம் ("சென்னை மாகாணச்சங்கம்") என்பதாக ஒன்று ஏற்படுத்தி நம்மில் சிலருக்குக்கந்து அவர்கள் வேலைமுடிந்ததும் அழித்து விட்டது போல் செய்யப் போகிறார்கள் முக்கிய காரணம் என்னவென்றால் இது சமயம் பார்ப்பனரல்லாதார் கொஞ்சம் கட்டுப்பாடாக இருப்பதுடன் தங்கள் இழிந்த தன்மையை தான். ஆகவே இக்கட்டுப்பாடு குலையாமல் யார் வேண்டுமானாலும் எந்தக்கட்சிக்கு வேண்டுமானாலும் ஸ்ரீமான் நாயுடுகார் சொல்வது போல் அவரவர்கள் தனித்த ஓதாவில் போய்க்கொள்ளுவதில் நமக்கு ஆக்ஷேபனை இல்லை ஆனால் கட்சியே சேருவதானால் தலைவர் யார், உபதலைவர்யார் மந்திரியார், பிரசிடெண்டு யார், என்பன போன்ற விஷயங்களின் சண்டையும் அதைக் காப்பாற்ற பல அயோக்கியத்தனங்களைச் செய்து கொண்டு அக்கப்போரில் காலம் கழிப்பதிலும் நேரம் சரியாய் போய்விடுமே ஒழிய உண்மையான வேலை செய்ய நேரமும் காலமும் இருக்கவே இருக்காது ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவும் ஜஸ்டிஸ் கட்சியில் சேரும் பார்ப்பனரல்லாதார்களுக்கு தங்கள் சொந்த ஓதாவில் காங்கிரசில் சேர சுதந்திரமிருக்கவேண்டுமென்று தான் கேட்கிறார் நாமும் அதினால் அதிக நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டு விடாது என்றே சொல்லுகிறோம். ஜஸ்டிஸ் கட்சியாலும் கூட நிர்மாண திட்டமாகிய கதரில் நம்பிக்கையில்லாதவர்களும் தீண்டாமை ஒழிவதில்சம்மதமில்லாதவர்களும் மது விலக்கில் லட்சியமில்லாதவர்களும் இரண்டொருவர் இருக்கிறார்கள் என்பது நமக்குத்தெரியும். ஆனபோதிலும் அக்கட்சி நிர்மாணத்திட்டத்தைஒப்புக் கொண்டதால் நாம் நம்மால் கூடிய ஆதரவை அளிக்கிறோமே அல்லாமல் இரண்டொருவருக்கு நம்பிக்கை இல்லை என்கிறகாரணத்திற்காக கட்சியையே குற்றம்சொல்ல முன்வரவில்லை. அது போலவே இஷ்டப்பட்டவர்கள் தங்களது மனச்சாட்சியை கட்சிக் கட்டுப்பாட்டின் பேரால் விட்டுக்கொடுக்க வேண்டியதில்லை என்று ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியில் "ராமசாமி நாயக்கரும் அவருடைய சகாக்களும் எதிர் கால நிலைமையை கவனித்து மறுபடியும் தீரயோசித்து ஒரு முடிவுக்கு வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்" என்று "தமிழ் நாடு" எழுதியிருக்கிறது. உண்மையில் அரசியலில் இது சமயம் எனக்கு சகாயாரும் இல்லை அன்றியும் எனக்கு என்று இது சமயம் யாதொரு கட்சியும் இல்லை. எனக்கும் சில தனிப்பட்ட நபர்களுக்கும் சில விஷயங்களில் மாத்திரம் அபிப்பிராய ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறதை ஆதாரமாக வைத்துக் கொண்டு தனித்த முறையில் எனது தொண்டை செய்து வருகிறேனே தவிர வேறில்லை. அது போலவே ஜஸ்டிஸ் கட்சியிலும் எனது அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளுகிற அளவு வரையில் நான் அக்கட்சிக்கும் தொண்டராயிருந்து எனது கொள்கைக்கு அதை உபயோகித்துக்கொள்ளுகிறேனே தவிர வேறில்லை. ஆகவே ஸ்ரீ வரதராஜுலு நாயுடு அவர்கள் இவ்விஷயத்தில் ஒவ்வொருவருக்கும் தனிசுதந்திரம் கொடுத்திருக்கிறது போலவே நமக்கும் கொடுப்பார் என்றே நம்புகிறேன்.

சென்னை மாகாண
பார்ப்பனரல்லாதார்
விசேஷ மகாநாடு.
ஜுன்-மீ 3-வது வாரத்தில் நடைபெறும்
கோயமுத்தூர்
வரவேற்புக்கழகத்தின் அறிக்கை.

இது வரையுள்ள மொத்த வசூல் ரூ. 3899

கோபிபிர்க்காவில் திரு. V. பழனிசாமி நாயுடுவும் திரு. பரமேஸ்வர செட்டியார் அவர்களும் செய்த வசூல் விபரம்.

பங்களாபுதூர் திரு. V. தாசப்ப கவுண்டர்	ரூ.	100
சொங்கா பாயளையம் K. நஞ்சப்ப கவுண்டர்	ரூ.	100
நஞ்சைப் புளியம்பட்டி மாஸ்தி கவுண்டர்	ரூ.	70
கிஞ்சப்பகவுண்டர்	ரூ.	50
கொண்டையம்பாளையம் ஸ்ரீமதி மாதம்மாள் ...	ரூ.	50
தாக்கநாயக்கன் பாளையம் திரு. அட்டியண்ணகவுண்டர்	ரூ.	25
திரு. பெருமாக் கவுண்டர்	ரூ.	70
ஆக கூடுதல்	ரூ.	4364

(நமது நிருபர்.)
சேலம் வாழ்க.
ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்.

4—6—27ல் நடைபெற்ற ஜில்லா போர்டு தேர்தலை தடுக்க மந்திரி சர்க்கார் உத்திரவை பிறப்பித்து இருந்தாலும்! அவ்வுத்திரவு புனராலோசனை செய்யுமாறு போர்டாரால் அறிவிக்கப்பட்டதாம். 31 அங்கத்தினர்கள் தங்கள் மகத்தான பொருப்பை உணர்ந்து தேர்தலை நடத்தவேண்டுமென்றதின் பேரில் நடைபெற்ற தேர்தலில் ராவ் பகதூர் எல்லப்ப செட்டியார் அவர்களே போர்டு பிரசிடெண்டாக யேகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

சுயமரியாதை நீடுழி வாழ்க!

வந்த வாசிதாலுகா
2 வது அரசியல் மகாநாடு.

நாளது பிரபவ வருஷம் வைகாசி மாதம் 22, 23 தேதிக்குச் சரியான ஜுன் 4, 5 தேதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் தென்னூர் பிர்க்கா நல்லூர் கிராமத்தில் தரும ராஜா கோவிலுக்கருகில் நூதனமாய் அமைத்திருக்கும் பந்தலில் "தமிழ் நாடு" ஆசிரியர் ஸ்ரீ. டாக்டர் பி. வரதராஜுலுநாயுடு அவர்கள் அவைத்தலைவையில் நடைபெறுமென வரவேற்புக்கமிட்டி த்தலைவர் நா. கோவிந்த ரெட்டியார் அறிவிக்கிறார்.

7ம் பக்கத் தொடர்ச்சி

விட்டார்கள் எனவே கோடிக் கணக்கான பார்ப்பனரல்லாதாருக்கு தன் தன் குடும்ப ஜீவனத்திற்கு மார்க்கமில்லாமல் இருப்பதுடன் மேல் கண்ட பார்ப்பனர்களுக்கு அழுகவும் சம்பாதிக்க வேண்டிய கஷ்டம் ஏற்பட்டு விட்டது அல்லாமலும் காங்கிரசின் பயனாய் "அரசியல் பார்ப்பனர்களுக்குச் செல்வாக்கு ஏற்பட்டு விட்டபடியால் பார்ப்பனரல்லாதார்களில் அரசியலின் மூலம்" பணம் சம்பாதிக்கவோ பதவி பெறவோ ஆசைப்பட்டவர்களும் பார்ப்பனர்கள் காலை சுற்றிக்கொண்டு அவர்கள் வாலைப்பிடித்துத் திரிய வேண்டி ஏற்பட்டுவிட்டது.

பயித்தியக்காரன்:— இதுதானா காரணம் வேறொன்றுமில்லையா.

உஷார்க்காரன்;— வேறு என்ன நீ தான் சொல்லு பார்ப்போம் எத்தனை பார்ப்பனரல்லதார், மகமதியர், கிறிஸ்தவர், பஞ்சமர், என்று சொல்லக்கூடியவர்கள் உள்பட பார்ப்பனரிடம் பணம் வாங்கிக்கொண்டு பார்ப்பனரல்லாதாரை திட்டுகிறார்கள். பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை வைகிறார்கள் பார்ப்பனர்கள் எவ்வளவு அயோக்கியர்களாயிருந்தாலும் அவர்களை நமது பார்ப்பனரல்லாதார்கள் "தலைவர்" "தென்னாட்டு மகான்" "பெரியார்" "தியாகி" "விவேகி" "குரு" எனப்பலவிதமாய்ப் புகழுகிறார்கள் ஏன்?

நம்மவர்களில் உண்மையான தியாகி இல்லையா? மகான் இல்லையா? தலைவர் இல்லையா? பெரியார் இல்லையா? விவேகி இல்லையா? எந்தப்பார்ப்பனரல்லாதாராவது நம்மவர்களைப்பற்றி சொல்லுகிறார்களா என்று யோசித்துப்பார் அதோடு நம்மவர்களை வையாமலாவது இருக்கிறார்களா? ஏன் பார்ப்பனர்களிடம் கொடுக்கப் பணம் இருக்கிறது பார்ப்பனரல்லாதாரிடம் வாங்கத்தரித்திரமிருக்கிறது. அப்படிக்கில்லாதிருந்தால ஒட்டமுள்ளவனுக்கு ஒரு கடுகளவு மூளையுள்ளவனுமான எந்தப் பார்ப்பனரல்லாதாராவது நமது சமூகத்தையும், நமது இயக்கத்தையும் பாழாக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காரை அவரது பொய், புரட்டு, புளுகு, வஞ்சகம், மானம் கெட்டத் தன்மை எல்லாம் வெளியானபிறகு கூட தலைவன் என்று கூப்பிட மனம் வருமா? ஸ்ரீனிவாசய்யங்காரிடம் கூலி வாங்கிக்கொண்டு அவர்களை முத்தமிட மனம் வருமா? அதோடு அனேக பார்ப்பனல்லாதாருடைய உழைப்பையும், பரிசுத்த எண்ணத்தையும், தியாகத்தையும் மனதாரப் பார்த்துக்கொண்டு அவர்களை வைய மனம் வருமா? காட்டிக்கொடுக்க வருமா? என்பதை நீயே யோசித்துப் பார், தவிரவும் நமக்கு இருக்கிற தரித்திரம் பார்ப்பனருக்கில்லை என்பதற்கு இன்னம் ஒரு சாட்சி காட்டுகிறேன். அதாவது எந்தப்பார்ப்பனனாவது பார்ப்பனரல்லாதாரிடம் பணம் வாங்கிக்கொண்டு எந்தப் பார்ப்பனரையாவது வைவதைப் பார்த்திருக்கிறாயா? வைவதற்குப்பத்திரிகை நடத்துவதைப்பார்த்திருக்கிறாயா? கொடுப்பதற்குப் பார்ப்பனரல்லாதாரிடம் பணமும் இல்லை ஒரு சமயம் இருந்தாலும் தனது சமூகத்தை விற்றாவது வாழவேண்டும் என்று சொல்லத்தகுந்த தரித்திரமும், பார்ப்பனர்களிடத்தில் இல்லை. இது தான் வித்தியாசமே ஒழிய பார்ப்பனர் மகா புத்திசாலி என்பதாவது பார்ப்பனரல்லாதாராகள் முட்டாள்கள் என்பதாவது இதன் பொருள் அல்ல. உதாரணமாக ஒத்தக்காசு செட்டியாரான ஸ்ரீமான் ஒ. கந்தசாமி செட்டியாருக்குப்புத்தியில்லை என்கிறாயா? அல்லது அய்யங்காரின் புரட்டுகளையும் பித்தலாட்டங்களையும், கெட்ட எண்ணத்தையும் சின்னப் புத்தியையும் அறிய சக்தி இல்லை என்கிறாயா? அல்லது அய்யங்காரை மகா பெரிய மனிதர் என்று மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறார் என்கிறாயா? செட்டியாரின் புத்திசாலித்தனம் அவருடைய பழைய வீரம், அவர் கொஞ்ச நாளைக்கு முன்பு பார்ப்பனர்களுடைய அயோக்கியத்தனத்தைப் புட்டுப்புட்டு விளக்கி இருக்கும் தன்மை அவருடைய கல்வி பார்ப்பனருடன் சேருவதற்கு முன் இருந்த ராவ்சாஹிப் பட்டம் முதலியதுகள் எனக்கு நன்றாய்த் தெரியும், கஷ்டகாலம் வந்தால் யார்தான் என்ன செய்வார்கள் அரிச்சந்திரன் சத்தியத்திற்கு ஆக பெண்டாட்டியை விற்றதாக கதையில்லையா? அதுபோல் நம்முடைய சகோதரர்கள் பலர் தரித்திரத்திற்கு ஆக சமூகத்தை விற்கிறார்கள் என்பதில் அதிசயமென்ன இருக்கிறது. அதற்கு யார் தான் என்ன செய்வது கடவுளைத்தான் கேட்க்க வேண்டும் கடவுளோ இடமில்லாதவர் ஆனதினால் குட்டிச் சுவற்றில்தான் முட்டிக் கொள்ள வேண்டும். போ! எனக்கு நேரமாய்விட்டது.

கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணனஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுபப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று மிகவு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

காங்கிரஸ் நிலை

அயோக்கியர்கள் புகுந்ததும் உத்தம புத்திரர் மகாத்மா காந்தி காங்கிரசினின்று விலகிவிட்டார்

அயோக்கியத்தனம் செய்ய ஆரம்பித்ததும் தமது கதரையும் காங்கிரஸ் திட்டத்தினின்று விலக்கிவிடப்போகிறார். இந்தியத்தாய்

தஞ்சாவூர் ஜில்லா போர்டு

ஆதி திராவிட மாணவர்கட்கு போர்டிங்கு

தஞ்சாவூர் ஜில்லா போர்டாரின் ஆதரவில் இராஜா சத்திரங்களின் நிதியிலிருந்து 1927-வருஷம் கோடைவிடுமுறை நாட்கள் கழித்த பிறகு ஆதித்திராவிட மாணவர் கட்காக தஞ்சாவூரில் சிரையால் சத்திரத்தில் போர்டிங்கு (இலவச சாப்பாடும் வசதியும்) ஏற்படுத்தப்படும். தங்கள் பையன்களைப் போர்டராகச் சேர்க்க விரும்புவோர் மாணாக்கர்களின் வயது, தகப்பனார் அல்லது போஷகரின் பெயர், இருப்பிடம் சேருவதற்குரிய வகுப்பு முதலிய விவரங்களைக்கண்டு சத்திரம் சூப்பிரண்டெண்டு அவர்கட்கு 7-6-27க்குள் மனுச்செய்துக்கொள்ள வேண்டும்.

(Sd) C. S. Ganapathi Raw Pillai,
B. A. B., L.
சத்திரம் சூப்பரின்டெண்டு.

தஞ்சாவூர் சத்திரம் ஆபீஸ்
22—5—27

ஐயங்காருக்கு அமெரிக்காமாதின் நற்சாக்ஷி பத்திரம்.

ஸ்ரீ S. சீனிவாசஐயங்காருடையவும் அவர்தம் சிஷ்ய கோஷ்டிகளுடையவும், மோசத்தைப் பற்றியும் அவர்களது தேசத்துரோகம் நாணயமற்ற தனம் பார்பனரல்லாதாரிடம் துவேஷம திறமையின்மை ஆகிய துகளைப் பற்றியும் நாம் பன்முறை எடுத்துக் காட்டி இருக்கிறோம். அதற்கு அனுசரணையாக அநேக சாக்ஷிகளும் குவிய ஆரம்பித்த இக்காலத்தில் ஐயங்கார் கூறும் ஒரே பதில் யாதெனில் "நான் பலர்களுக்கு கொடுத்து வந்தபணத்தை நிறுத்திவிட்டேன் அதற்குத்தான் இவ்விதம் கூறுகிறார்கள் அதை நம்பாதீர்கள் என்கிறார்" ஆனால் இன்று ஐயங்கார் யோக்கியதையைப் பற்றி, ஓர் அமெரிக்கா மாது சொல்வதற்கென்ன சொல்கிறார், மிஸ். கிரேஸ் ஹட்சின்ஸ் என்ற அமெரிக்கா மாது எழுதுவதாவது. மகாத்மா காந்தி அரசியல் விஷயங்களிலே தலையிடுவதில்லை. அவர் சமய இயக்கத்தையே நடத்திவருகிறார். இந்தியா உயர்ந்த வாழ்வை பெறவேண்டுமானால்" அது அங்குள்ள 7000 கிராமங்களின் வாயிலாகவே முடியும்........................

"இந்தியன் நேஷனல் காங்கிரஸுக்குத் தலைமை வகித்தவர் S. சீனிவாச ஐயங்கார் என்பவர், கடுத்தமான யோக்கிதையுடையவர். அரசியல் கக்ஷிகளை ஒழித்து ஒற்றுமை படுத்த போதுமான ஆற்றல் இல்லாதவர்" ஒரு சமயம் இந்த அம்மையாரும் பணம் கேட்டு ஐயங்கார் கொடுக்கவில்லையோ?

பிராமணரல்லாதாரும் காங்கிரசும்.

திரு. க. வா. வெங்கிடாசலம் பிள்ளை எழுதுகிறார்

மே-மீ 24-தேதி வெளிவந்த "திராவிடன்" பத்திரிகையில் 6வது பக்கத்தில் "அகில இந்திய பார்ப்பனரல்லாதார் மகாநாடு' என்றதலைப்பிட்டு கோயமுத்தூரிலிருந்து ஒரு பிரபல தேசியவாதி எழுதுகிறார் என்ற வியாசத்தை நண்பர்கள் படித்திருக்கலாம். நமது மாகாணத்தில் பிராமணர்கள் காங்கிரசின்பேரால் செய்துவரும் அக்கிரமங்களையும் அதற்காககாங்கிரசையேதங்கள் வயப்படுத்திக்கொண்டு தங்களுடைய நடத்தைக்கு போக்கியதா பத்திரம் பெறுவதையும் யோசிக்கும்போது "தேசீய வாதி"யின் அபிப்பிராயத்தை பிராமணரல்லாதார் ஒப்புக்கொள்ளவேண்டியது தான்.

காங்கிரசு பிரமை.

தற்போது பிராமணரல்லாதார்களாகிய ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களிற் சிலர் காங்கிரசில் சேர்ந்து அதன் மூலமாய் 'பிராமணரல்லாதாருக்கும் தேசத்திற்கும். ஏதோ நலன் செய்ய உத்தேசித்திருப்பதாக தெரிகிறது. இப்படி யிவர்கள் நினைப்பதற்கு ஒரு காரணம் உண்டு. அதாவது:— கடந்த நவம்பர் தேர்தலில் காங்கிரசின் பெயரையும் காந்தியடிகளின் பெயரையும் சொல்லிக் கொண்டும் வங்காளத்தில் இரட்டை ஆக்ஷியை ஒழித்த தேசபந்துவின் அடிச்சுவட்டை பின்பற்றி நடப்பதாயும் பொய்யும் புளுகும் பேசி மகாஜனங்களை ஏமாற்றி சில ஜஸ்டிஸ் கக்ஷியாரின் இருக்கைகளை காங்கிரசுக்காரர் கைப்பற்றி விட்டதால் காங்கிரசிற்கு அதிகமதிப்பிருக்கிறதாக நினைக்கின்றார்போல் தெரிகிறது. தேசமக்களுக்கு மகாத்மா காந்தியடிகளின் ஒத்துழையாக்காங்கிரசின் பேரிலும தேசபந்துவின் முட்டுக்கட்டை காங்கிரசின் பேரிலும் தேசமக்கள் நம்பிக்கை வைத்திருந்தது உண்மையே அதினால் தான் சுயராஜயக்கக்ஷிக்கு ஓட்டும் கொடுத்தது. ஆனால் இப்போது காங்கிரசில் காந்தியடிகள் திட்டமாவது தேசபந்துவின் திட்டமாவது எங்கே? அதை யெல்லாம் காற்றில் விட்டு விட்டு சென்னை காங்கிரசு தலைவர் உள்பட சட்டசபை அங்கத்தினர்கள் வரை வாக்காளர்களுக்கும் தேசத்திற்கும் பெரிய துரோகம் செய்து விட்டு இரட்டை ஆக்ஷியை நடத்துவதை கண்கூடாகக் கண்டு தேசமக்கள் எல்லாரும் சென்னை சுயராஜ்யக்கக்ஷியையும் அதற்காதரவளித்த அ. இ. கா. காரியக்கமிட்டியையும் காங்கிரசையும் தூற்றி வருவதோடு தேசமக்களில் பெரும்பாலோர்களும் உண்மையாளர்களும் கண்டித்து வருவதும் யாவருமறிந்தவிஷயம். காங்கிரசின் மதிப்பு எவ்வளவுதூரம் இருக்கிறதென்பதை பரீக்ஷைபார்க்க வேண்டுமானால் காங்கிரசின் பேரைச்சொல்லி வெற்றிபெற்ற எந்த மெம்பராவது (வாயாடியின் அக்கிரரம் நீங்கலாக) தங்கள் பதவியை ராஜினாமா செய்து மீண்டும் தெரிந்தெடுக்கப் படுவாரானால் எல்லோரும்இப்போதையகாங்கிரசில் சேரலாம். ஜனங்கள் யாரும் தூங்கவில்லை விழித்துக்கொண்டேயிருக்கிறார்கள். ஒருமுறை ஏமாற்றலாமே யொழிய மறுமுறையும் ஏமாற்ற முடியாது "நெல்லஞ்சோற்றுப்பிச்சை நித்தநித்தம் கிடைக்குமா"! ராஜீய விஷயங்களைப்பொருத்தமட்டில் காங்கிரசில் பிராமணரல்லாதார் ஒத்துழைப்பதென்றும் சமூக விஷயங்களைப்பொறுத்தமட்டில் இப்போதைப்போலவே தனித்து நிற்கலாமென்றும் சிலர் சொல்வதாகவும் தெரிகிறது இதானது இப்போது முஸ்லீம்லீக் ஹிந்துமகாசபை இருப்பதுபோல சென்னை மாகாணத்தில் தமிழரியக்கம் என்று ஒன்றை வைத்துக்கொள்ளலாமென்று சொல்வது போலிருக்கிறது இது கொஞ்சமும் ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. காங்கிரசுக்கும் முஸ்லீம்லீக்குக்கும் இந்து சபைக்கும் எந்தசம்பந்தமும் இருப்பதாகத்தெரியவில்லை வெளிக்கு ஒற்றுமையாய்த் தெரிந்த போதிலும் உள்ளுக்குரோதமாகத்தான் தெரிகிறது காங்கிரசிலிருந்து அநேக முஸ்லீம்கள் விலகிக்கொண்டார்கள் இப்போதிருக்கிற முஸ்லீம்கள் இருக்கிறவிடம் தெரியவில்லை சூராதிசூரராகக் கொண்டாடப்பெற்ற அலிசகோதரர்களுக்கு தேசத்தில் முஸ்லீம்களால் செல்வாக்கில்லை காங்கிரசின் பேரால் ஏதாவது சபையில் பேச ஆரம்பித்தால் அநேககூட்டங்களில் பேசவிடுவதில்லை கல்லை போடுகிறார்கள் ஆகவே ஷாபிகளும் அமீத்கான்களும் நீங்கலாக காங்கிரசின்பேரில் முஸ்லீம்களுக்கு நம்பிக்கைபோய்விட்டது. ஹிந்துமகாசபையைப் பற்றியும் காங்கிரசிற்கு நல்ல அபிப்பிராயம் இல்லை. காங்கிரசின் பேரிலும் ஹிந்துசபைத்தலைவர்களுக்கு நம்பிக்கையில்லை. ஆகவே இப்போது காங்கிரசானது ஏதோ ஒரு அதிகாரஆசை யுள்ளவர்கள்கையில் அகப்பட்டு ஒரு சிறு தொகையினர்கள் ஆதிக்கத்திலிருப்பதென்பது நன்குதெரிந்து விட்டது. இந்த நிலைமையில் மிடாவைக்கொண்டு சொம்புக்குள் புகுத்துவதைப்போல் 100 க்கு 97 பேர்களடங்கிய உத்தம ஜஸ்டிஸ் கக்ஷியை நூத்துக்கு 3 பேர்களுள்ள அடங்கிய பிராமணக்கக்ஷியாகிய தற்காலகூது ஐயங்கார் காங்கிரசில் நுழைப்பதெற்காக? ஆகையால் காங்கிரசு பிரமையை விட்டுவிடவேண்டியதுதான்.

எல்லோரும் ஒரு கைபார்த்தவர்களே.

கடந்த 40 வருஷங்களாக காங்கிரசை எல்லாரும் அறிந்தவர்களே. ஆகிலும் என்ன "பொய்யேதி ஒட்சேதி" தான். காரியம் ஒன்றுமில்லை. இப்போது கேசத்திற்காக சிறை வாசம் முதலிய தியாகம் செய்தவர்கள், யாராவதிருக்கிறார்களா? அல்லது உலகம் போற்றும் காந்தியடிகளாவது இருக்கிறார்களா? ஒருவருமேயில்லை. இருப்பதெல்லாம் வக்கீல்களும், மைலாப்பூர் பிரமுகர்களும் தான். இவர்கள் மட்டும் அட்டை போல் ஒட்டிக்கொண்டிருப்பது எதற்கு? சோழியன் குடுமி சும்மா ஆடுமா? ஆடவேயாடாது. காங்கிரசின் பெயரைச் சொல்லிக்கொண்டு தேசத்தாரை ஏமாற்றவும் தங்கள் பந்து ஜனங்களுக்கு உத்தியோகம் தேடவும் பிராமணரல்லாதார்களை அடிமைப்படுத்தவும் அரசாங்கத்திற்கு நல்ல பிள்ளையாய்க் காட்டிக் கொள்ளவுமே தான். ஆனால் அந்த சூட்டும் வெளியாய்விட்டது. சுயராஜ்யக் கக்ஷிக்காரர்களென்று சொல்லிக் கொண்டிருந்த சட்டசபை அங்கத்தினர்களும்,காங்கிரசில் பெரிய உத்தியோகங்கள் பெற்றிருந்தவர்களும், அதை விட்டு வந்து கொண்டிருக்கிறார்கள், காங்கிரசை ஆதரிக்க பத்திரிகைகளும், ஆசிரியர்களும் பல மாய்க்கண்டித்து எதிர்ப்பிரசாரம் செய்ய முன்வந்து கொண்டிருக்கிறார்கள். மற்றும் சிலர், காங்கிரசிலிருந்து விலகிக்கொண்டால் பிராமணரல்லாதார்கள் தங்களை நம்புகிறார்களோ இல்லையோ என்று மதில் மேல் பூனையாய் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டொரு பெரியார் தங்களை காங்கிரசுக் காரர்கள் சட்டை செய்யாது போகவே ஜஸ்டிஸ் கட்சியில் சேருவதற்கு நிபந்தனையாக ராஜீய விஷயத்தில் காங்கிரசுடனும், சமூக விஷயத்தில் தனித்தும், பிராமணரல்லாதார் வேலை செய்ய வேண்டுமென்று யோசனை சொல்வதாயும் தெரிகிறது ஆகவே எல்லோருக்கும் மயிர் பிளக்கும்படியான புளிப்பு காங்கிரசின் பேரில் ஏற்பட்டிருக்கும்போது இப்போது நமது கட்சியார் எதற்காக காங்கிரசை விரும்பவேண்டும்? இதுமட்டுமா? நமது இயக்கத்தைத் தோற்றுவித்த அரும் பெருந்தலைவர்களாகிய நமது காலஞ்சென்ற பூஜ்யர்களும் சிலகாலம் காங்கிரசில் உழைத்து வண்டவாளம் தெரிந்தபின்பே உதறித்தள்ளிவிட்டு நமதுபுனித இயக்கத்தை தோற்றுவித்து ஏதோ ஆண்டவன் அநுக்கிரகத்தால் பிராமணரல்லாதார் சிறிது சிறிதாக சமத்துவமும், சுயமரியாதையும், பிரதிநிதித்துவமும் பெற்று வந்து கொண்டிருக்கிறார்கள். வெண்ணை திரண்டு வரும்போது தாழியை என் உடைக்கவேண்டும்? டாக்டர் நாயர் பெருமான் தியாகராயவள்ளல் இவர்களைவிட தீர்க்கதரிசிகளுமுண்டோ? தவிர, காங்கிரசைக் கைப்பற்றுவதற்கு நமக்கு மெஜாரிட்டி எங்கே? சென்னை மாகாணத்தில் மட்டும் மெஜாரிட்டி கிடைத்தால் போதுமா? மற்ற மாகாணங்களில் அதிகப்படியானவர்கள் பிராமணர்களுக்குகட்டுப்பட்டவர்களல்லவா? இவர்கள்ஜஸ்டிஸ் இயக்கத்திற்கு காங்கிரசில்இடந்தருவார்களா? அப்படித் தந்தாலும் சென்னைநண்பர்கள்வாளா இருப்பார்களா?

கொஞ்ச நாள் தலைவராயிருக்கலாம்.

பிராமணரல்லாதார்கள் காங்கிரசில் சேருவதில் ஒரு லாபமுண்டு. அதாவது தலைவர் பதவி சில நாள், சிலருக்குக் கிடைக்கும். எதுவரை யென்றால் திருவாளர்கள்,மருதவாணம் பிள்ளை, முத்துரங்க முதலியார், சாமி வெங்கிடாசலம் செட்டியார், கோவிந்தராஜ முதலியார், கந்தசாமி செட்டியார் இவர்கள் போல மைலாப்பூரை பிரதக்ஷணம் வந்து புஷ்பார்ச்சனை செய்யும் வரை தான். அதற்கு மாறுபடும்போது தலைவர் பதவி போய் காலர் பதவிதான் கிடைக்கும். அதற்கு ஆதாரமாக மனுதர்ம சாஸ்திரத்தைக் காட்டி நீங்கள் காலில் பிறந்தவர்கள் காலர்கள் நாங்கள் முகத்தில் பிறந்ததால் தலைவர்கள் என்று நிரூபித்து ராஜிய விஷயத்திலும் சமூக விஷயத்திலும் பிராமணரல்லாதார்களை தாழ்த்தியே விடுவார்கள். சில நாள் தலைவர் பதவி சிலருக்குக் கிடைப்பதற்காக, கோடிக்கணக்கான பிராமணரல்லாதாரை பலிகொடுப்பது ஞாயமல்ல. சென்னை சுயராஜ்யக் கக்ஷி பிராமணர்கள் செய்யும் அக்கிரமங்களைத் தெரிந்தும் மவுனம் சாதிக்கும் ஒத்துழையாத்தலைவர்கள் காங்கிரசை ஜஸ்டிஸ் கட்சியார் கைப்பற்றினவுடன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து பெரும் போர் தொடரமாட்டார்களா?

முன்னிற்கும் வேலை.

ஆகையால், நமக்கு முன்னிற்கும் வேலை காங்கிரசில் போய்ச்சேருவதல்ல. தற்கால காங்கிரசை ஒழித்து விட்டு தேசத்திற்கும், பிராமணரல்லாதாருக்கும், நலன்தரக்கூடிய மகாத்மா காங்கிரசை உண்டாக்குவது தான். "தேசீயவாதி" எழுதுவது போல 42-வது பார்ப்பனர் மகாநாடு சென்னையில் கூடும்போது 12-வது பார்ப்பனரல்லாத அகில இந்திய மகாநாட்டை சென்னையிலேயே கூட்டவேண்டும். அதற்கு இன்று முதலே கங்கணம் கட்டிக்கொள்ளவேண்டும். பிரசாரத்தை துவக்கவேண்டும். ஆங்காங்கு வாலிபச்சங்கங்கள் ஏற்படுத்தவேண்டும். தென்னிந்திய நலவுரிமைச்சங்கங்கள் கிராமங்கள்தோறும் காணவேண்டும், ஒவ்வொரு பிராமணரல்லாதாரும் ஜஸ்டிஸ் கட்சியில் சேரும்படி செய்யவேண்டும். அப்படியே எந்தப் பிராமணரல்லாதாரும் இப்போதுள்ள காங்கிரசில் சேராமல் கேட்டுக்கொள்ள வேண்டும் இப்போது காங்கிரசிலிருப்பவர்களை பணிவுடன் கேட்டுக்கொண்டு காங்கிரசிலிருந்து விலகி நமது கட்சியில் சேரும்படி செய்யவேண்டும். இதில் ஒருவிதமான அகவுரவமும் கிடையாது. அப்போது சென்னையில் நடக்கும் காங்கிரசிற்கு பிராமணரல்லாதார்கள் பணத்தாலோ, சரீரத்தாலோ எவ்வித உதவியும் செய்யாமல் கேட்டுக்கொள்ள வேண்டும். அதற்கு பெரு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். சருக்கச்

கூறுமிடத்தில் காங்கிரசிற்கு பந்தல் வேலைக்குக் கூட பிராமணரல்லாதார் கூலி வேலைக்குப் போகக்கூடாது. காங்கிரசிற்கு ஜஸ்டிஸ் கட்சி பரம விரோதியென்று திரு. சத்தியமூர்த்தி சொல்லி வருவதை ஏற்றுக்கொண்டு ஆமாம் இந்த பார்ப்பனக் காங்கிரசுக்கு பரம விரோதிதான் என்பதை பகிரங்கமாய்த் தெரிவித்து காங்கிரசுக்கோ அல்லது காங்கிரசு பந்தலுக்கோ, மைலாப்பூர் தலைவர்களைக் கொண்டே குழி தோண்டச் செய்யவேண்டும். அப்படி நம் மக்கள் கூலிக்குப் போவதாயிருந்தால் இரண்டு மடங்கு கூலி பெறும்படி செய்யவேண்டும். இந்த உணர்ச்சியை தொழிலாளர்களிடமும், கூலிவேலை செய்பவர்களிடமும் வண்டிக்காரர்களிடமும் உண்டாக்குவதற்கு பெருமுயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

பத்திரிகைகள்.

மேல்கண்ட பிரசாரம் செய்யவும் வெளியூர்களிலுள்ளவர்களுக்கும், வெளிமாகாணங்களிலுள்ளவர்களும், சென்னைமாகாண ஜனங்களுக்கு காங்கிரசின் பேரில் அதிக வெறுப் பேற்பட்டு எதிர்ப்பிரசாரம் செய்வதையும் அப்படி ஏற்படுவதற்கு காரணம் இம்மாகாணத்தில் சுயராஜியக் கட்சியார் காங்கிரசிற்கும் வாக்காளர்களுக்கும் விரோதமாய் துரோகம் செய்து விட்டதற்கும் பம்பாயில் கூடிய அ. இ. கா. கமிட்டி சென்னை சுயராஜியக்கட்சியார் நடத்தையைப் பாராட்டியிருப்பதற்கும், தற்கால காங்கிரசு சுயநலமுள்ளவர்களுக்கே தக்க இடமாயிருக்கிறதென்றும் இன்னும் இது போன்ற அக்கிரமங்களை யெல்லாம் வெளிப்படுத்தி பிரசாரம் செய்வதற்காக நமது கட்சிப்பத்திரிகையாகிய "ஜஸ்டிஸ்" "திராவிடன்" "குடி அரசு" முதலிய பத்திரிகைகளை ஒவ்வொரு பிராமணரல்லாதாரும் வாங்கிப் படிக்கும்படி வாலிபர்கள் முக்கிய பிரசாரம் செய்ய வேண்டும்.

அடுத்த டிசம்பர் மாதம் நடக்கும் காங்கிரசை மகாஜனங்கள் விரும்பவில்லை யென்பதைத் தேசத்தாருக்குக் காட்ட. ஒத்துழையாமை செய்து அதை உயிரற்ற சடலம் போல் செய்யவேண்டும்.

அதேசமயத்தில் நமது அகில இந்திய பிராமணரல்லாதார் மகாநாட்டை தேசியக்காங்கிரசு போல சிறப்பாக நடத்திக்காட்டவேண்டும்

ராயல் கமிஷன்.

இப்பொழுது நடந்துவரும் ஆட்சியில்பிராமணரல்லாதார் வீழ்ந்து காங்கிரசுதான் தேசிய சபை, பிராமணர்கள் தான் தலைவர்கள் என்பதை அடுத்துவரும் ராயல் கமிஷனில் நிரூபித்து விடாமல் பிராமணரல்லாதார் ஆகிய ஒரு பெருங் கூட்டம் தனித்து நிற்கிற தென்றும் அது வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்கிற தென்றும், சம உரிமை கேட்கிற தென்றும், கல்மேல் எழுத்துப் போல் செய்து விடவேண்டும் இந்த சந்தர்ப்பத்தில் தலைவர்கள் உஷாராக இருக்க வேண்டும். "குயவனுக்கு பல நாள் வேலை தடிக்காரனுக்கு ஒரு நிமிஷ வேலை" என்று நமது பிராமண சகோதரர்கள் செய்து விடுவார்.

கோவை மகாநாடு

"தேசீயவாதி" யென்பார், ஒரு பெரிய அநுபவமுடையவரென்றும் அவரும் என்னைப்போலவோ அதிகமாகவோ காங்கிரசில் உழைத்தவராகவும், கஷ்டப்பட்டு வெளிவந்தவர் போலவும் தெரிகிறபடியாலும் அவர்கள் சொல்வது மிகவும் பொருத்தமுள்ளதாகவும் ஒப்புக்கொள்ளக்கூடியதாகவுமிருப்பதால், கோவை மகாநாட்டை இன்னும் இரண்டு வாரம் ஒத்திவைத்தாவது விசேஷ மகாநாடாகக் கூட்டி சென்னை தலைவர்களும் மாகாணத்திலுள்ள எல்லாத் தலைவர்களும் கோவை ஜில்லாவாசிகள் ஆண் பெண் எல்லோரும் பெருந்திரளாக வந்து டிசம்பர் சென்னை மகாநாட்டை சிறப்பாக நடத்தக்கூடிய மாதிரியிலும் அதின் மூலமாகவே பிராமணரல்லாதார் பூர்ண விடுதலை அடையும் மாதிரியிலும் உருவான தீர்மானங்கள் செய்து உடனே பிரசாரங்களையும் ஆரம்பிப்பார்களென்றும் முற்றிலும் எதிர்பார்க்கலாம். கோயமுத்தூரில் நமது மகாநாட்டுக்கு உபசரணைக் கமிட்டி அங்கத்தினர்களாக சேர்ந்திருப்பவர்களும் தலைவர்களும் பெருஞ்செல்வாக்குடையவர்களும் நினைத்தகாரியத்தை முடிக்கக்கூடிய ஆற்றலுமுடையவர்களுமாவார்கள் இது நான் உபசாரத்திற்காக சொல்வதல்ல மகாநாடு நடந்தபின் தெரிந்துகொள்ளலாம் கோவைதான் நமது இயக்கத்திற்கு கோட்டை யென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்

அற்றகுளத்தில்......... கொட்டியுமாம்பலும் நெய்தலும் போலவே.........என்ற மாதிரி மாறுத நிலையுடைய தலைவர்கள் அநேகர் இங்கேயே இருக்கிறார்கள் மகாநாட்டை முன்னிட்டு பணவசூல் ஆகிக்கொண்டிருப்பதை "குடி அரசி"ன் மூலமாகப் படித்தவர்களின் உத்சாகத்தைப் பற்றி எழுதுவது அநாவசியம்

ஆகையால் பிராமணரல்லாதார் மாபெருந்தலைவர்களே! காங்கிரசில் போய்ச் சேர்ந்துகொண்டு நாம் சுயமரியாதை தேடுவதென்பது பகல்கனவேயாகும் இதற்கு மேலே பல காரணங்களை விண்ணப்பித்திருக்கிறேன் காங்கிரசு என்ற ஒன்று இப்போதில்லை அது மறைந்திருக்கிறது அதை வெளிப்படுத்த நீங்கள் முயற்சி செய்யும் பக்ஷத்தில் என்போன்றவர்கள் உங்களுக்கு அளவு கடந்த ஆதரவும் ஊழியமும் செய்ய பின்வாங்க மாட்டோம் தற்கால காங்கிரசைப்பற்றி என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்

கொம்புளதற்கைந்து குதிரைக்குப் பத்து முழம்
வெம்பு கரிக்காயிரந்தான் வேண்டுமே-வம்புசெறி
தீங்கினர் தம்கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி

வந்தேமாதரம்

பார்ப்பனீயப் பாட்டு.

பார்ப்பனக் கொடுமை தீர்ப்பவர்யாரோ
ஏற்கும் தொழிலினர்கள் நம்யார்க்கும் கொடியவர்கள் (பார்)
சூத்திரராம் நாமவர் க்ஷத்திரியின் மக்களாம்
பார்த்தீரா பார்ப்பனன் சாத்திரம் சொல்வது (பார்)
காப்பிக்கடைப்பார்ப்பனனைக் கடவுளின் பெயரிட்டு
சாப்பிட வருபவர் கூப்பிடத் தகுமா (பார்)
தீண்டாதவர்களாம் (அவர்) திருமுகப் பிறப்பினராம்
காலிற் பிறந்ததினால் (நாம்) கடையர் களாமேனுமாம (பார்)
சூத்திரர் பெண்களைக் கூத்திகளாக்கி யென்றும்
காத்திருக்கும் படியவர் சாத்திரம் சொல்லுதாம் (பார்)
வேதங்களிலிருக்குதாம் அது விதிகளைச் சொல்லுதாம்
நாமதைச் சொல்லி விட்டால் நாவினையறுப்பாராம் (பார்)
பஞ்சாங்கம் பார்ப்பனன் பணமொன்றைக் கேட்பான்
அஞ்சாது பார்ப்பான் அவன் நம்மைத்தீர்ப்பான் (பார்)
உத்தியோகம் பார்ப்பான் உள்ளதெல்லாமுறிப்பான்
சத்தியமாய் நம்மை யெல்லாம் நித்திய மூக்கெடுப்பான் (பார்)
வக்கீலுபார்ப்பான் எக்காலமும் கோர்ட்டில்
சிக்கவைத்துப் பொருள் ஒக்கவே தீர்ப்பான் (பார்)
தீர்த்த யாத்திரைக் கென்பான் திருமணந் தனக்கென்பான்
சாந்தி முகூர்த்த மென்பான் சாகும் வரைகருத்தின்பான் (பார்)
புரோகிதப் பார்ப்பான் துரோகிதக்காரன்
பரோபகார மாகப் பாவங்கள் தீர்க்கிறானும் சோற்றுண்டி (பார்)
செத்துப் போனவர்க் கெல்லாம் சேர்ப்பானும்
நித்தமுமிவன் வயிற்றை நிறப்பிவிட் டோமானால் (பார்)
கோவிலிற் பார்ப்பான் சாமியைக் காப்பான்
பாவிகளாம் நாம் பார்க்கக்கூடா தென (பார்)
படிமிசைப்பார்ப்பனர் கொடுமையை தீர்த்திட
குடியரசெனும் பெயர்க் கொற்றவன் தோன்றினன் (பார்)
தீரதபார்ப்பனியம் தீர்க்கப்பிறந்தசுய
வீராதிவீரரான விஜய ஜயராம தீரர் (பார்)
பாரோரிகழ்ந்திடு மிப்பார்ப்பனியந் தொலைக
சூராதி சூரர் மெச்சும் சுயமரியாதை வாழ்க (பார்)

தமிழன்
ஸ்ரீ காந்திநிகேதனம்
நேகமம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்கலாம் சூரியனுடைய பிரகாசம் தேசமெங்கும் வீசுகின்றதெனினும் கண்களில்லாதவன் அதைக்காண முடிவதில்லை அதுபோல், நம் இறைவனை நாம் முறைப்படி நேரில் நண்ணுமையால் அவன் நட்பத்தை நன்றுபறியவோ அனுபவிக்கவோ முடியவில்லை. கண்ணினால் உருவமும் காதினால் சப்தமும் மூக்கினால் மணமும் நாக்கினால் ருசியும் த்வக்கினால்பரிசமும் அறிவதுபோல் எந்தக்கருவிகளைக்கொண்டு எந்தக்காரியத்தை அறியவேண்டுமோ அவ்வண்ணம் முயன்றாலன்றி நேத்திரத்தைக்கொண்டு சப்தத்தைக்கேட்கவோ சுரோத்திரத்தைக்கொண்டு உருவத்தைப்பார்க்கவோ முயலுவதியலாது. அதுபோல் ஆத்மாவை அறியவும் சகுணோபாசனை செய்யவும் வேண்டி ஆலயங்களமைக்கப்பட்டிருக்கின்றதென்று சொல்வதும் ஒரு சிறிதும் பொருந்தாது சகுணோபாசனையென்று சொல்லுவது சத்வகுணஉபாசனையாம் **சத்வகுணம்** நல்லகுணம் (சாத்வீககுணம்) உபாசனை-சேவித்தல் ஆகவே ராஜஸம தாமஸம் என்ற குணங்களை நீக்கி சாத்வீக குணத்தை அடையமுயல்வதுதான் சகுணோபாசனையாம் சத்வகுணமென்றால்

"சத்யம் ஞானம் தபோமௌனம் சுருதிர்மம்தி (திக்ஷ
உத்ஸாஹம் நிச்சயம் தைர்யம் சாத்வீக குண லக்ஷ (ணம்.

இதன் கருத்து:— உண்மை, அறிவு, சுகதுக்காதிகளை சமமாகச் சகித்தல். அடக்கம், பொருமை, உண்மை நூலாராய்சி, சமதர்மம், சுருசுருப்பு உறுதி, தயிரியம், முதலான குணங்களை சாத்வீக குணங்களெனப்படும். இக்குணங்களை அடைவதுதான் சகுணோபாஸனையெனப் பெயர்பட்டது. சகுணோபாஸனையின் உண்மை இவ்வாறிருக்க கோவில்களுக்கும் குருக்களுக்கும் உற்சவங்களுக்கும் வாணவேடிக்கைகளுக்கும் ஆக நாளுக்குநாள் பணத்தை நாசம் செய்து நம் சுயமதிப்பை யிழக்கவும் அந்நிய மதத்தினர் பழிக்கவும் ஒரு பெரும் வழியாயிருக்கின்றதேயன்றி ஆலயங்களாலான பயனென்ன? முத்திக்கு மார்க்கமென்றுரைக்கும் அர்த்தமில்லாத வார்த்தைகளும் பொருத்தமற்ற செய்கைகளும் நிந்தித்த மாத்திரமன்றி எதனையும் முக்திக்கு யுக்தமானதன்றென்பதில் ஐயமென்ன? எக்காலத்திலும் எவ்விடத்திலும் கடவுள் ஒருவராயிருக்க முற்காலந்தொட்டு முரண்பட்ட கடவுள்களனேக முண்டாவானேன்? விஷ்ணுவின் அவதார புருடரெனப்புகழா நின்ற புத்தர்பெருமான் விக்ரஹாராதனையை நிக்ரஹிக்க முயன்றகாலத்தில் நடந்ததென்ன? அது யாரால் நடந்தது? விஷ்ணுவின் அவதாரமென்று புகழ்ந்து கூறுவானேன்? விக்ரஹாராதனையை நிக்ரஹிக்க முயன்றதினால் தயாநிதியாகிய அவரை எதிர்ப்பானேன்? விஷ்ணுவின் அவதாரமென்றும் பசுஹிம்சையை த்வம்ஸிக்க வந்த தனியவதாரமென்றும் முன்னர் வரவேற்று பின்னர் துரத்துவானேன்? இப்பொழுது விளங்கவில்லையா. என்னே ஏமாற்றம் ஏமாற்றம்

கல்சிலைகளுக்கு உயர் கொடுக்கவும். கடவுளை வரவழைக்கவும் கூடுமான மந்திர சக்தி நம பார்ப்பனர்களுக்கிருக்கிறதென்று சிலர் கூறுகின்றனர் என்ன! அறியாமை. உயிர்கொடுக்கும் சக்தி, இப்பார்ப்பனர்களுக்கிருந்தால் இறந்துபோன பார்ப்பனர்களையெல்லாம் எழுப்பிவிடலாமே? ஏன் செய்வதில்லை? அவ்வண்ணம் செய்தால் நூற்றுக்கு மூன்றுபேர்விகிதமுள்ள ஜனத்தொகையை பெருக்கவும் மனுதர்மத்தை வளர்க்கவும் மேலும் சௌகரியமாயிருக்குமன்றோ? மூட நம்பிக்கை மூடநம்பிக்கை.

ஓசைபெற்றகல்லை நீருடைத்து நுக்கள் செய்திர்
வாசலில் பதித்த கல்லை மறுக்கவும் மிதிக்கிறீர்
பூசைபெற்ற கல்லை பூவும் நீரும் சாற்றுதிர்
ஈசனுக்குகந்த கல்லிரண்டு கல்லுமல்லவே.

என்ற சிவவாக்கியரின் வாக்கிய ரீதியாய் லட்சக்கணக்கான பணங்களைச் செலவழித்து க்ஷேத்திரங்களைக்கட்டுவதாலும், கல்லினாலும் செம்பினாலும் விக்ரஹங்களை அமைப்பதினாலும், வெள்ளி, தங்கம் முதலான உலோகங்களால் யானை, யாளி முதலான வாகனங்களைச் செய்வதாலும் பன்னீர், இளநீர் பால், தேன் முதலானவைகளால் அபிஷேகம் ஆனதாலும் அமவடை, பாயாசம், அதிரசம், புப்பட்டு, தயிரன்னம், மதுரான்னம் முதலானவைகளை வைத்துப்படைப்பதாலும் துளசியா, வில்வமா, நல்லெருக்கா, வெள்ளெருக்கா, தாமரையா, பாதிரியா ஈசனை பூசிக்க எது சிறிது? எது பெரியது? என்று சண்டையிடுவதாலும், கடவுளைக்கனப்படுத்தி, அவன் காருண்யத்திற்கு இலக்காவோமென்று கருதி திருப்தி அடைவோர். கடவுள் வெறும் ஆடம்பரங்களில் பயித்தியமுள்ளவரென்றும், சுத்த சாப்பாட்டு ராமனென்றும், முகஸ்துதியில் விருப்பமுள்ளவரென்றும், லஞ்சம் வாங்குவதில் பேர்போனவர்களென்றும் கருதியிருக்கின்றார்கள் போலும். இத்தகைய செய்கைகள் இதர மதத்தினர் நம்மை ஏளனம் செய்ய, நம் முட்டாள் தனத்தை விவரமாய் வியாக்கியானம் செய்து காட்டுவதேயன்றி வேறென்ன?

அன்பர்களே! போதும், போதும். இத்தகைய ஆபாசமான சாஸ்திரங்களையும், ஆபாசக் கொள்கைகளையும் இன்றைக்கே விட்டு விடுவாம் உண்மை நெறியிலிறங்குவாம. "ஏகமே வாத்விதீயம்". என்றதால் கடவுள் ஒருவர்தானென்றும், "சமோஹம் சர்வேஷு பூதேஷு நிஷ்டந்தம் பரமேஸ்வரம்" என்றதால், சர்வேஸ்வரன் சர்வ ஜனங்களிடத்தும் சமத்வமாயிருக்கின்றான் என்றும் ஏற்பட்டது. ஆகவே கடவுளுக்கு தேஹமே ஆலயமென்றும், அவர் சர்வ ஜனங்களிடத்தும சமத்வமாயிருக்கின்றாரென்றும, கடவுள் எல்லோரிடத்தும் சமத்வமாயிருப்பதால் ஒவ்வொருவரும் அவரைப் பூசிக்க உரிமை உடையவர்கள்தானென்றும் உணர்ந்து கொள்வாம். எனவே மோட்சத்தை அடைய விரும்பும் முமுக்ஷுக்களாகிய நாம காத்திர க்ஷேத்திரங்களில் குடியிருக்கும் கடவுளை சுயமரியாதை யென்ற புஷ்பத்தினால் பூசிப்போமானால அடிமைத்தனமென்ற பந்தத்தினின்று விலகி சமூஹ தேச விடுதலை" என்ற மோட்சத்தை அடைவோமென்பதை கருத்திலிருத்துவோமாக.

குட்டுவெளியாய் விட்டது

பார்ப்பன சுயராஜ்யக் கட்சியின் மோசத்தை வெளியிட உடனே சம்பள பிரேரணையை எதிர்க்கவேண்டும் என்று நமது "குடி அரசு" கூறிற்று. சட்ட சபையில் மைனாடி கட்சியார் எதிர்க்கக்கூடாதென்கிறார்கள். மந்திரி சம்பள விஷயத்தைப் பற்றி ஆலோசித்த அநேக கூட்டங்கள் சீனிவாசய்யங்கார் பங்களாவில் கூடியது யாவும் அந்தரங்கம் வெளியிட முடியாது என்றார்கள். முடிவில் சம்பளப் பிரேரணையின் பொழுது வெளியே போய்விட்டார்கள். இவையாவும் சுத்த புரட்டென்றும் மந்திரி கட்சியை கைவிட்டு விடாதீர்கள் என்று நேருவும், சீனிவாசையங்காரும் தந்தி கொடுத்தார்களென்பதையும், அண்டப்புளுகர் திரு சத்யமூர்த்திக்கு மாதா மாதம சம்பளம் மந்திரிகளால் கொடுக்கப்படுகிறதென்றும் "குடி அரசு" அக்காலத்திலேயே கூறியிருக்கிறது இவைகளை யாரும் மறுக்கவில்லை. இச்சம்பவத்தை பொட்டி எண்ணற்ற, அர்த்தமற்ற அறிக்கைகள் வெளிவந்தது. நேற்றைய ஐய்யங்கார், ஐயர் சண்டையில் குட்டு வெளியாயின.

சத்தியமூர்த்தியிடமிருந்து டெல்லியில் கிடைத்த தந்தியை சீனிவாசய்யங்கார் எனக்கு காட்டி அதன்படி நடக்கவேண்டுமென்றும் கூறினார். எங்கள் மாகாணக் கமிட்டி தடுத்திருப்பதால் சம்பள பிரேரணையை ஆதரிக்குமாறு ஆந்திர அங்கத்தினர்களுக்கு தந்தி கொடுக்க நான் மறுத்துவிட்டேன், பின், நேருவும், சீனிவாசய்யங்காரும் சென்னை சட்டசபை சுயராஜ்யக் கட்சி அங்கத்தினர்களுக்குத் தந்தி கொடுத்தார்களென்று திரு பிரகாசம்நேற்று ஒப்புக்கொண்டுவிட்டார். அடுத்தாற்போல் சத்தியமூர்த்தி, சீனிவாசய்யங்காரிடம் சம்பளம் பெற்று வருவதை ஐயங்காரே சொல்லிவிட்டார் இனி மந்திரிகளிடம சத்தியமூர்த்தி பெறும சம்பளவிகிதம் வெளியாகவேண்டியது பாக்கி அதுவும வெகு சீக்கிரத்தில் வெளியாகிவிடும் என்றே எதிர்பார்க்கிறோம்.

பட்டுக் கோட்டை

பட்டுக்கோட்டை தாலுக்கா பூவைக்குத்திக்காடு ஸ்ரீவிவேகாநந்தர் ஆஸ்ரமத்தாரால், குருவிற்கரம்பை ஸ்ரீ பாலதெண்டாயுதபாணி விசாகோற்சவத்தில் 200 ரூ கதர் விற்பனை செய்யப்பட்டது. ஒவ்வொருநாளும் மாலையில் பொது ஜனங்களுக்கு புரோகித பகிஷ்காரத்தைப் பற்றி சொற்பொழிவுகள்நிகழ்த்தப்பட்டது குறிப்பிடததக்கது. தாலூகாபோர்டு ஜில்லாபோர்டு அங்கத்தினரும் கோவில் டிரஸ்டி மானேஜருமான ஸ்ரீமான் ஆ. வயி. பாலசுப்ரமண்யம சேர்வை அவர்கள் ஆஸ்ரமத்தாருக்கு போதிய உதவி செய்ததுடன் கடைசி தினத்தன்று ஆயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு அன்னமளித்தார்கள் டை ஊரில் குடி அரசு சந்தாதாரரான ஸ்ரீமான் மு. வீ. நடேச தேவரவர்கள் புரோகித பஹிஷ்காரத்தை அமுலில் கொண்டுவருவதற்குத தன் சொந்த தோப்பில் சங்கம் ஒன்று ஏற்படுததுவதற்கு கட்டிடம் கட்டிவருகிறார், இங்குள்ள கிராம வாசிகள் இதைப்பற்றி யோசித்து வருகிறார்கள. ஷையார்களுக்கு நீண்ட ஆயுளும் கிடாத்திரமும் பொது விஷயங்களில் மென்மேலும் உற்சாகமும் அளிக்கும்படி ஸ்ரீ பாலதெண்டாயுதபாணியை பிரார்த்திக்கிறேன்.

ஆஸ்ரம, காரியதரிசி.

பாரதத்தாயின் துயரம்.

(சித்ரா புத்திரன் எழுதுவது)

ஏ காங்கிரசே; நீ என்று ஒழிகிறாயோ அன்று தான் நான் விடுதலை அடைவேன் நீ இப்போது பாரதத் தாயாகிய என்னைக் மீளா நரகத்திலாழ்த்தி விட்டாய், என் மக்களில் பெரும்பாலோரை அயோக்கியர்களாக்கி விட்டாய் யோக்கியமான மக்களை குறைத்து விட்டாய் நீ. இல்லாமலிருந்தால் இப்போது தலைவர்கள் தேசபக்தர்கள் என்று சொல்லிக் கொள்ளும் அநேக அயோக்கியர்கள் என் சார்பாய் பேசி வயிறு வளர்க்க முடியுமா? நீ இல்லாவிட்டால் என்து அருமைப் புத்திரனான காந்திமகான் எனக்காகச் செய்த தவமும் தியாகமும் ஆத்ம சக்திப் பிரயோகமும் பலனற்றுப்போகுமா? நீ இல்லாவிட்டால் உன்னுடைய உபத்திரவம் இல்லா விட்டால் எனது அருமைகள் மகாத்மா மூலையில் உட்கார முடியுமா? நீ இல்லாவிட்டால் பம்பாயில் கூடிப்பேசிய அயோக்கியர்களும் சுய நலக்காரரும், துரோகிகளும் 'ஜனப்பிரதிநிதிகள்' ஆவார்களா? என்பெயரைச் சொல்லி என்னை காட்டிக் கொடுத்து மாதம் 1-க்கு 1000 2000 3000 4000 5000 6000 வீதம் எனது ஏழைகளின் பணத்தை பணமாக கொள்ளை கொள்ளுவார்களா? என்னை மானபங்கப் படுத்த இத்தனை வக்கீல்கள் வருவார்களா? எனது கற்பை அழிக்க இத்தனை கோர்ட்டுகள் ஏற்படுமா? இவற்றிற்கு எல்லாம் யார் பொறுப்பாளி காங்கிரஸ் பாவியாகிய அரக்கி நீ அல்லவா எனக்கு எமனாய் தோன்றி இருக்கிறாய்? என்று நீ ஒழிவாய் அன்று நான் நரகத்தில் இருந்து எழுவேன் விடுதலை பெருவேன் சுயமரியாதை அடைவேன் இது சத்தியம்.

பாரதத்தாய் தனது மக்களுக்குச் சொல்வது.

ஏ மக்களே! உங்கள் மூட புத்தி என்று ஒழியும் உங்கள் மூடபுத்தியாலல்லவா நாட்டில் பிளேக்கு காலரா வைசூரி முதலிய தொத்து வியாதிகள் இருப்பது போல் காங்கிரஸ் சுயராஜ்யம் தேசியம் முதலிய தொத்து வியாதிகள் பரவி என்னைப் பாழாக்குகிறது. காலரா பிளேக் வைசூரி ஒவ்வொன்றும் மனிதனின் சரீரத்தையும் உயிரையும் மாத்திரம் பற்றி கொள்ளை கொள்ளக் கூடியது, ஆனால் "காங்கிரஸ்" "சுயராஜ்யம்" "தேசியம்" என்னும் வியாதிகளோ எனது முப்பத்து முக்கோடி மக்களையும் அவர்கள் வாழும் தேசமாகிய என்னையும் அவர்களது அறிவையும் செல்வங்களையும் ஒழுக்கங்களையும் என் உயிர் போன்ற சுயமரியாதையையும் கொள்ளைகொண்டு பாழ் பண்ணிக்கொண்டு வருகிறதே இதை கவனிப்பதில்லையா? மக்களே நீங்கள் மாக்கள் அல்ல என்பதற்கு இது தானா அடையாளம் இவ்வியாதிகளின் பேரால் "வைத்த பாரமெல்லாம் சுமக்கிறேன் இன்னும் வை இன்னும் வை" என்று உங்கள் முதுகைக் குனிந்து கொடுக்கிறீர்களே இதுதான் உங்கள் மக்கள் தன்மையா?

எவனாவது ஒரு காங்கிரஸ் காரன் இந்த ஊருக்கு ஒரு கோர்ட்டு வேணுமென்று விண்ணப்பம் எழுதிக்கொண்டு வந்தால் உடனே நீங்கள் அப்பன் மக்கள் எல்லோரும் கையெழுத்து போட்டு விடுகிறீர்கள். கோர்ட்டு வைத்த மறுநாளே நீங்களே அப்பன், மக்கள், அண்ணன், தம்பி, எஜமான், குமாஸ்தா, குடியானவன், மிராஸ்தார் முதலிய என்கிற முறையில் கோர்ட்டுக்குப் போக வேண்டியவர்களாகிறீர்கள்.

பிராமணியமும் பிரிட்டானியமும் இந்த இந்த இரண்டைவிட தேசியமே பெரிய ஆபத்தானது. பிரிட்டானியத்தை கடுகளவாவது அசைக்க வேண்டுமானால் முதலில் இந்த தேசியமும் இரண்டாவது ஆக பிராமணியத்தையும் துலைக்க வேண்டும். பிராமணியத்தை நிதானமாகக்கூட ஒழிக்கலாம் அவசரமாக தேசியத்தை ஒழிக்க வேண்டும். ஏனெனில் தேசியமே பிரிட்டானியத்திற்கு அஸ்திவாரமாயிருக்கிறது. தேசியத்தை இடித்து விட்டால் பிரிட்டானியம் ஆடிப்போகும். தேசியமில்லாதிருக்குமானால் வெகு நாளைக்கு முன்பே பிரிட்டானியம் உண்மையான சுதேசியமாய் விட்டிருக்கும்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வின் கத்தியைத் தடுக்கவில்லை. வெள்ளைக்கார நீதியின் பீரங்கியே இவர்கள் சிம்மாசனத்தைக்காப்பாற்றிக் கொண்டிருக்கிறதுஎல்லாருக்கும்பொது வாய்ச்சமத்துவமாய் ஞாயமாய் நடக்கவேண்டுமென்னும் ஆங்கிலேய நீதி வற்புறுத்தும் இந்தக் காலத்தில் வைதீக கொடுமையால் ஜனங்களைத் தாழ்த்தி வித்தியாசப்படுத்தும் இந்து ராஜாங்கம் இருக்கையில் கேட்பார் இல்லாமலிருந்தகாலத்தில் வைதீகக் கொடுமையின் அக்கிரமத்தால் இந்து ராஜாங்கம் கேட்டுப்போனதென்பதை சொல்லவும் வேண்டுமோ! இன்று நேரமாய்விட்டதால் நாளை ஞாயிற்றுக்கிழமை பாக்கியைச்சொல்லுகிறேன்.

அறிவிப்பு.

வெளியூர்களில் இருந்துவந்து கோயம்புத்தூரிலுள்ள பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் மாணவர்களின் சௌகரியத்திற்காக கோயம்புத்தூர் ஜில்லாபோர்டு ஹாஸ்டல் என்பதாக சாப்பாட்டுவிடுதி ஒன்று கோயம்புத்தூரில் ஜூன் மாதம் 10 தேதிக்குள் ஜில்லா போர்டாரால் ஏற்பாடு செய்யப்படும் அதில் ஏற்படும் செலவுகளை எல்லா மாணவர்களிடமிருந்தும் விகிதாசாரம் வசூலிக்கப்படும். அதில்சேரபிரியமுள்ள மாணவர்கள் அடுத்த ஜூன் மாதம் 5 தேதிக்குள்ளாக கோயம்புத்தூர் ஜில்லாபோர்டு பிரசிடெண்டுக்கு விண்ணப்பம்செய்து கொள்ளவேண்டும். ஒரு ஹாஸ்டலுக்கு தேவையான மாணுக்கர்கள் சேராத பட்சம் ஹாஸ்டல் திறக்கப்பட மாட்டாது

கோயம்புத்தூர் ஜில்லாபோர்டு ஆபீஸ் 24—5—27 } C. S. இரத்தினசபாபதி முதலியார், பிரசிடெண்டு.

மனமறி நூல்

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான ஆருட சாஸ்திரம். வடமொழி நூலை ஆதாரமாகவுடையது.

விலை ரூபாய் ஒன்று.

ஜோதி சாஸ்திரம்

உபாத்தியாயரின்றி 30 நாளையில் ஜோதிஷம் கற்கலாம் எல்லா ஜாதகங்களுக்கும் பலன்கள் சொல்லக்கூடும் பஞ்சாங்கமின்றி எந்த ஜாதகமும் கணிக்கலாம். விலை ரூபாய் ஒன்று.

மு. வடிவேல் செட்டி,
110, ஈஸ்பரன் தர்மராஜா கோவில் வீதி
புதுச்சேரி.

குறைந்த விலையில் மிகச் சிறந்த ஸில்க்!

அமெரிக்கன் ஸில்க்.

துய்ய வெள்ளை, திக்கான பட்டு, தினசரி சலவை செய்யலாம். 5 முழ நீளம் x 40 இஞ்சி அகலமுள்ளது நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி, தபாற் பெட்டி 99, சென்னை.

2-ம் பக்கத் தொடர்ச்சி.

கிறார்கள்,—பழைய கூச்சலும், ஆர்ப்பாட்டமும் எங்கே போயிற்றென்று தெரியவில்லை ஜஸ்டிஸ் கட்சியாரை பிறமி மந்திரி சபையை எந்த விதத்தில் சிலாக்கியமென்று தலைநிமிர்ந்து பேச அவர்களுக்கு இப்பொழுது யோக்கியதையில்லை. ஜஸ்டிஸ் கட்சியாரைவிட அதிகமாகவே கத்தரையும் காந்தியையும் பிறமி மந்திரி சபை அமைத்திருக்கிறது. சென்னை கார்பரேஷனில் காந்தி படம் வைக்கக்கூடாதென்று பனகால் ராஜா உத்தரவிட்டவுடன் ஆகாயமும் பூமியுமாக குதித்த பத்திரிகைகள் தூத்துக்குடி முனிசிபாலிட்டியில் காந்தி படத்தை வைக்கக்கூடாதென்று டாக்டர் சுப்பராயன் உத்திரவிட்டதைப்பற்றி ஒன்றும் பேசக்காணவில்லை. ஜஸ்டிஸ் மந்திரிகள் காந்திக்கு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கக்கூடாதென்று சொல்லிய சமயத்தில் ஆர்பாட்டம் செய்த சுயராஜ்யக் கட்சி தலைவர்களோ, பத்திரிகைகளோ இன்று டாக்டர் சுப்பராயன் உத்தரவைக்கண்டு ஒன்றும் சொல்ல முன்வரவில்லை. இதைப்போலவே, மதுரை முனிசிபல் சேர்மன் தேர்தல் விஷயத்தில் பனகால்ராஜா தலையிட்டதற்காக பத்தி பத்தியாய் எழுதிய "சுதேசமித்திரன்" சேலம் ஜில்லா போர்டு தலைவர் தேர்தலில் டாக்டர் சுப்பராயன் தலையிட்டதைக்கண்டு கண்ணை மூடிக்கொண்டது. ஆனால் இந்தப் பத்திரிகைகள் விஷயத்தை மூடி வைத்த போதிலும் பழைய மந்திரி சபையைவிட இந்த பிறமி மந்திரி சபை சகல விஷயங்களிலும் மோசமானதென்பதை ஜனங்கள் அறிந்து கொண்டு விட்டார்கள். ஆகவே, இனி எத்தனை கூடற்கரை பிரசங்கங்களில் கர்ஜித்த போதிலும், எத்தனை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிகளில் தீர்மானங்கள் செய்யப்பட்ட போதிலும், பிறமி மந்திரி சபை காசுபெறுமென்பதையும், அதை ஆதரிக்கும் சுயராஜ்யக் கட்சியார் வேஷதாரிகள் என்பதையும் ஜனங்கள் மறந்துவிடமாட்டார்கள்.

தேவை.

குடி அரசை சென்னையில் விற்பனை செய்யவும், சந்தாதாரர்கள் சேர்க்கவும் ஒரு ஏஜண்டு தேவை. விருப்பமுள்ளவர்கள் 100 ரூபாய் டிபாசிட்டுடன் ஜூன் மாதம் 5 தேதிக்குள் மனுச் செய்து கொள்ளலாம். விபரத்துக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்,

மானேஜர், குடி அரசு ஈரோடு.

சேலம் மாம்பழம்.

தினசரி விலவாரத்திற்கு முதல்தரமாக பொறுக்கி எடுத்தனுப்புகிறேன். முதல்தரம் குறிப்பிட்ட ஸ்டேஷனுக்கு பாக்கிங் அண்டு ரெயில் சார்ஜ் சேர்ந்து 100க்கு ரூ. 7. 2-ம் தரம் 100க்கு ரூ. 5. ஒட்டுமாங்கன்று சீமை கொய்யா புஷ்பவிதைகளுடைய 1927வருஷத்திய கேட்லாக் இனாம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரிதோட்டம் சேலம்.

சந்தாநேயர்களுக்கோர் அறிவிப்பு

நாம் இதுவரை வெளியூர்களில் சந்தா பணம் வசூலிக்கவாவது, விளம்பரப்பணம் வசூலிக்கவாவது ஒரு ஏஜண்டுக்காவது அதிகாரம் கொடுக்கவில்லை. இப்படி இருக்க "குடி அரசி"ன் பெயரைச் சொல்லி சந்தா சேர்ப்பதாக நேயர்களிடமிருந்து பணம் வசூலித்து விடுகிறார்களென்று கேள்விப்படுகிறோம். ஆகையால் நேயர்கள் யாரிடமாவது பணத்தைக் கொடுத்து விட்டு எமது காரியாலயத்திலிருந்து பத்திரிகையை எதிர்பார்க்க முடியாது. ஆகையால் இவ்வித அசம்பாவிதங்களுக்கு நேயர்கள் ஏமாந்து போகாமல், சந்தா தொகையை முதலானதுகளை நேரிலேயே அனுப்பி விடுமாறு வேண்டுகிறோம்.

மானேஜர்
"குடி அரசு", ஈரோடு.

அகஸ்தியர்

தாது சஞ்சீவி லேகியம்.

மிகுந்த பலத்தையும் வீரிய விருத்தியும் சரீர புஷ்டியும் உண்டாக்குவதுடன் இந்திரியஸ்கலிதம், நரம்புத்தளர்ச்சி, அஜீர்ணம், மலபந்தம, பித்தமயக்கம், பசியின்மை, கைகால் அசதி, இடுப்புவலி முதலான துர்க்குணங்களை, நிவர்த்தித்து சரீரதிடகாத்திரம் உண்டாக்கும்.

10-பலம் லேகியம் டின் 1-க்கு விலை ரூபாய் 2.
தபாற் செலவு— அணா 6.

டி. என். ஜி. பிள்ளை,
பெரிய கடைவீதி, திருச்சி.

புத்தக விளம்பரம்.

கிகம்பர சாமியார் பால்ய லீலை	அணா	12
தமிழ் வியாசங்கள்	,,	9
ராம்மோகனன் & கங்காதரன்	,,	7
ஹம்ஸதேவி & பெண்புத்தி பிரகாசிகை	,,	4

ஆனந்த நிலையம் திருச்செங்கோடு.

தேவை.

கோலார் தங்கவயல் ஜீவகாருண்ய சங்கத்திற்கு ஜீவகாருண்ய பிரசாரகர் ஒருவர் தேவை. குலம், மதம் முதலிய வேற்றுமைகளைப் பாராட்டாமல் தெருக்கள் தோறும், வீடுகள்தோறும் ஜனக்கூட்டம் நிறைந்த எல்லாவிடங்களுக்குஞ் சென்று கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளுண்ணாமை, அன்னதானம் முதலிய சன்மார்க்க நெறிகளை சுருதி யுக்தி அனுபவங்களுக்கேற்ப தீவிர பிரசாரம் செய்யக்கூடியவராய் இருத்தல் வேண்டும். தமிழில் நல்ல பாண்டித்தியம் பெற்றும், ஜீவகாருண்ய சீலம் பொருந்தியும், எல்லா மதங்களையும் தழுவி பிரசாரம் செய்யும் அனுபவமும் ஆற்றலும் உள்ளோரே சங்கக்காரியதரிசிக்கு மனு செய்து கொள்ளலாம். வாக்கு சாதுர்யத்தையும், பிரசாரக முறையையும் சாமர்த்தியத்தையும் பொருத்தே சம்பளம் தீர்மானிக்கப்படும்.

விலாசம்:— காரியதரிசி,
ஜீவகாருண்ய சங்கம்,
இராபர்ட்சன்பேட்டை (கோலார் தங்கவயல்)

விளம்பரம்.

ஸ்வராஜ்யத்தைப்பற்றி மகாத்மா.

காந்தி என்ன சொல்கிறார் என்று அறிய வேண்டுமானால் "விபாசககோவை" என்ற நூலை உடனே படியுங்கள். இதில் தேசாபிமானத்தைப்பற்றி பல அரிய ரஸமான விஷயங்கள் காணப்படும். தேசாபிமானத்தையும், மதாபிமானத்தையும் விரும்பும் ஒவ்வொரு இந்து முஸ்லீம்களுக்கும் இந்நூல் மிகவும் அவசியம். டாக்டர் பி. வரதராஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது, விலை ரூ. 1.

சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன

வ. மி. ஷம்சுதீன் சாஹிப்,
(ஆக்கியோன்)
தபாற்பெட்டி நெ, 339,
கொழும்பு.

சேலம்
நார்பட்டுப் புடவைகள்

சாயம் கெட்டி! **விலை சரசம்!!**

நமது சொந்த தறிகளால் தயார் செய்யப்பட்ட அழகிய பளபளப்பான கண்களைக்கவரும் பல கலர்களில், பிளேன்களிலும், கரைகளிலும் பேட்டுவைத்தும், உடவில் பவளக்கொடி, தந்த கம்பிகளிலும் தயார் செய்யப்பட்ட $2\frac{1}{4}$ முழம் அகலமும் 18 முழம் நீளமுமுள்ள பலகலர்களில் சேலைகளும், $2\frac{1}{2}$ முழம் அகலம் 12முழம் 14முழம் சேலைகளும், 30 அல்லது 33 இன்ச் அகலம் 9 கெஜம் நீளம் பல கலர்களில் பல ரகங்களில் பாவாடைகளும், $7\frac{1}{2}$ கெஜம் நீளம் 1 கெஜம் அகலமுள்ள பலவித சித்தாடைகளும், ஜாக்கட், சர்ட், ரவிக்கை ரகங்களும், பட்டு வேஷ்டி 5 முழம் முதல் 6 முழம் வரையிலும், சாதா பிளேன், சன்னகம்பி வைத்தும் சரிகை பேட்டு வைத்தும், இன்னும் நார் பட்டுகளில் சம்பந்தமான அநேக ரகங்களும் கோகார்ஜான் புடவைகளும் தயார்செய்கிறோம். நூல் ரகங்களிலும் தயார் ஆகிறது. தேவைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிவிலை விபரம் தெரிந்து கொள்ளலாம்.

(மெடல் சர்ட்டிபிகேட் பெற்ற)

K. R. Chinnasamy Chetty.
Sidda Chetty & Co.
Artificial Silk Cloth Merchant, Gogai Salem. (S. India)

இலவம் பஞ்சிற்றுயில்.

மெத்தைக்கு இலவம் (சில்க்) பஞ்சு வெளியூர்களுக்கு குறித்த காலத்தில் அனுப்ப முடியும். மொத்தமாய் வாங்கினால் விலை சரசம்.

சி. சுப்பைய முதலியார்
மண்டி
கோயமுத்தூர்.

சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல், வயிற்றுவலி, சதை வளர்ச்சி, முதலியவற்றைத் தீர்க்கும், அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனாம். விலை ரூ. 2. வி. பி. வேறு.

ஆனந்த நிலையம் திருச்செங்கோடு.

மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு (S. I.)

தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார்ப் பேட்டை, புதுச்சேரி

கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
8000 கஜம் நூல்

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்பத்திரிகையின வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகததை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட விஷயம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு

ஏஜண்டுகள் தேவை.

வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் நம்முடைய

கதர் பனியன்களை

விற்பனை செய்வதற்கு தக்க ஏஜண்டுகள் தேவை. திறமைக்கு தகுந்தபடி கமிஷன் கொடுக்கப்படும். விபரம் தெரிய விரும்புவோர் ஒரு அணா ஸ்டாம்புடன் தங்கள் விலாசத்தை தெரியப்படுத்தி கொள்ளவும்

M. V. கருப்பண்ண செட்டியார்,
திருப்பூர்.
(தென் இந்தியா)

திருப்பூர்
சுத்த கதர் துணிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சல்லடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர்இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்களும் மலிவாய் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

சர்வமேக சம்ஹாரி.

சகல மேள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, தடிப்பு, முதலிய மேகம் இருபத்தொன்றையும் ஒரு வாரத்தில் குணப்படுத்தும். ஒரு வார மருந்து விலை ரூ 2. வி. பி. வேறு கேட்லாக் இனாம்

ஆனந்த நிலையம் திருச்செங்கோடு (S. I.)

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்

தாய்மார்கள்
கவனிக்கவேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டுவருகிறது. 20 வருடத்து அனுபவம், எம்மதத்தாரும் வாங்கலாம். அனுபவிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும் இதன் விலை தபால் செலவின்றி ரூ. 1—4—0 மாத்திரம

குறிப்பு:—காத்துக்கருப்பு விஷயத்திற்கும் தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும மருந்தாலும் சிகிச்சை செய்யப்படும்.

விலாசம்:— எ. எஸ். எ. மாந்திரிக டாக்டர்
இனாம்தார் வீடு,
சின்னகடைத்தெரு, தெப்பகுளம், திருச்சி.

நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின் பேரிலும், சுவரிலும், வைக்கலாம். இராத்திரியல் படுக்கையிலிருந்தபடியே விளக்கைஇதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும எரியும். பிரகாசம் கண்ணைப்பறித்துக் கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளானஜனங்கள் அதிசயத்தைப்பார்க்கக் கும்பலாகக் கூடிவிடுவார்கள், மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்து அனுப்பப்படும். குறைந்த விலை ரூ. 4—8—0 தபால் செலவு 0—8—0.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.